Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 342 | திங்கட்கிழமை | ஐப்பசி 22 ஆம் நாள் 08 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்–

## சிவயோகன் காலமானார்

யாழ்ப்பாணம், நவ.8
வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எந்திரி வேலுப்பிள்ளை சிவயோகன் நேற்றுக் காலமானார்.
கடந்த வடக்கு மாகாண சபையில் உறுப்பினராகப் பதவி வகித்த இவர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உடுப்பிட்டிக் கிளைச் செயலாளரா

15

## கைமீறுகின்றது தொற்று நிலைமை

# மீளவும் வரலாம் கட்டுப்பாடுகள்!

கொழும்பு, நவம்பர் 8
தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்துவரும் நிலையில், தளர்த்தப்பட்ட கட்டுப்பாடுகளை மீண்டும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சுகாதாரத் துறையினர் ஆலோசனைகளை ஆரம்பித்துள்ளனர். நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாக ஏறுமுகத்தில் உள்ள நிலையில், இது ஆபத்தானது என்று சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

15

## கொரோனா சாவு 15 தொற்று 626

கொழும்பு, நவ.8
கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது. இந்த உயிரிழப்புகளுடன் இலங்கை

15

## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.8
விபத்தில் சிக்கி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். இந்த விபத்து கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர்-மானிப்பாய் வீதியில் சுழி

15

## ஈய ஆலைச் சுவர் இடிந்து தொழிலாளி நசுங்கிச் சாவு!

வவுனியாவில் சம்பவம்



வவுனியா, நவ.8
ஈயம் உருக்கும் ஆலையின் சுவர் திடீரென இடிந்து வீழ்ந்ததில் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்

15

## வடக்குக்கு சிவப்பு எச்சரிக்கை

## இன்று முதல் மழை கொட்டும்

யாழ்ப்பாணம், நவ.8
வடக்கு மாகாணத்தில் இன்று பிற்பகலுக்குப் பின்னர் பரவலாக கன மழைக்கு வாய்ப்புள்ளது என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.
வங்காள விரிகுடாக் கடற்பகுதியின் தென்கிழக்குப் பகுதியில் தோன்றியுள்ள தாழமுக்கம் காரணமாக, இந்த நிலைமை எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
தாழமுக்கம் நாளை மேற்கு அல்லது வடமேற்குத் திசை நோக்கி நகரலாம் என்று நம்பப்படுகின்றது. அதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பாகக் காணப்படலாம். மீனவர்கள் கடலுக்குச் செல்

15




"பயணக்கட்டுப்பாடு எண்டிட்டு பழையபடி கடையளை பின்பக்கமா திறக்க பிளான் பண்ணுகினம் போல கிடக்கு"

## 17 வயது மாணவன் நஞ்சருந்திச் சாவு!



யாழ்ப்பாணம், நவ.8
இரவு நித்திரைக்குச் சென்ற 17 வயது மாணவன் ஒருவர் மூச்சுத் திணறலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தில் நடந்துள்ளது.
மாணவனின் உயிரிழப்புக்கு நஞ்ச

15



## ஒட்டகப்புலத்தில் வெடிபொருள்கள்

யாழ்ப்பாணம், நவ.8
வலி.வடக்கு, ஒட்டகப்புலத்தில் உள்ள காணி ஒன்றில் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.
இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடு

15

## இழந்த கல்வியைப் பெற புதிய திட்டம் அறிமுகம்!

கொழும்பு, நவ.8
கொரோனாத் தொற்றுக் காரணமாக பாடசாலை மாணவர்கள் இழந்த கல்வியை மீள வழங்குவதற்காக புதிய வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது என்று தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.
கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக மாணவர்கள் இழந்த கற்றல் நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய கல்வி நிறுவகத்தால் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.
2020 ஆம் ஆண்டு கல்வி இழப்பானது மேல் மாகாணத்தில் 55 சதவீதமாக

15



பரந்தன் விவசாய விதை உற்பத்திப் பண்ணைக்கு முன்பாக கார் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து நேற்று மாலை நடந்தது. ஏ–9 வீதியால் பயணித்த கார், வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. வாகனத்தில் பயணித்தவர்களுக்கு பெரியளவிலான பாதிப்புக்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (எ–4,26)

# ஒட்டுமொத்த அரசையுமே கொளுத்தி, வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும்

## மனோ கணேசன் எம்.பி. ஆவேசம்



**கொழும்பு, நவ. 8**

**விவசாயத்துறை அமைச்சரின் கொடும்பாவியை மட்டுமல்ல, ஒட்டு மொத்த இந்த அரசை கொளுத்தி, வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும்." என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பாதீடு ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனாவுக்கு மத்தியிலும் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் இலங்கைக்கு கடன் கொடுத்தன. அந்தநாடுகள் பொருளாதாரத்தை முகாமை செய்யவில்லையா? அப்படியானால் எமது நாட்டு அரசுக்கு மட்டும் ஏன் தடுமாற்றம்?

தேசிய உற்பத்தியில் புரட்சி செய்யப் போவதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவித்துள்ளார். மஞ்சளுக்கு தடை விதிக்கப்பட்டது. நாட்டில் தற்போது மஞ்சள் இருக்கின்றதா? பாசிப்பயறு, உளுந்து உள்ளிட்ட பொருள்களும் இல்லை. அரசு தோல்வி கண்டுள்ளது.

விவசாய அமைச்சரின் மட்டுமல்ல இராஜாங்க அமைச்சரின் கொடும்பாவியையும் எரிக்க வேண்டும் என்கின்றனர். ஆனால், இந்த இருவரின் கொடும்பாவியை மட்டுமல்ல, ஒட்டு மொத்த அரசையுமே கொளுத்தி, வீட்டுக்கு அனுப்பவேண்டும்.

எமது பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நிவாரணம் வேண்டும். யாரோ பெற்ற பிள்ளைக்கு, யாரோ பெயர் வைப்பதுபோல தமிழ் முற்போக்கு கூட்டணியால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களுக்கு சிலர் இன்று பெயர் வைக்கின்றனர்" - என்றார். (த-இ)

# சீரற்ற வானிலை
## 4,391 பேர் பாதிப்பு ஐவர் உயிரிழப்பு

கொழும்பு,நவ.8

சீரற்ற வானிலையால் 12 மாவட்டங்களில், ஆயிரத்து 143 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 391 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐவர் உயிரிழந்தனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ஒ-4)

# கடுகதி ரயில் சேவைகள் இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு,நவ.8

நகரங்களுக்கு இடையிலான கடுகதி ரயில் சேவைகள் இன்று முதல் மீள ஆரம்பிக்கப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ரயில் திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவிக்கையில்;

கடந்த முதலாம் திகதி முதல் மாகாணங்களுக்கு இடையிலான அலுவலக ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் இரவு 7 மணிக்குப் பின்னர் தூர மற்றும் குறுந்தூர ரயில் சேவைகள் வழமைபோன்று இடம்பெறுவதில்லை.

தற்போது 180 முதல் 200 ரயில் சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை வரை இடம்பெறும் நகரங்களுக்கு இடையிலான கடுகதி ரயில் சேவையை மீண்டும் இன்று முதல் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு முதல் கண்டி வரை சேவையில் ஈடுபடும் நகரங்களுக்கு இடையிலான கடுகதி ரயில் சேவையும் இன்று முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

வழித்தடத்தில் ஏற்பட்டுள்ள தடைகள் மற்றும் மண்சரிவு காரணமாக பதுளைக்கான ரயில் சேவை தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது. நிலைமை சீரான பின்னர், அந்த ரயில் சேவையும் மீள ஆரம்பிக்கப்படும்.

யாழ்தேவி ரயில் தற்போது யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடுகின்றது. ஏனைய ரயில்களையும் சேவையில் ஈடுபடுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரம், அடுத்த கலந்துரையாடல்களில், இரவு நேர அஞ்சல் ரயில் சேவைகளையும் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம்- என்றார். (ஒ-22)

# சஜித் பிரேமதாஸ தலைமையில் மக்களுக்கான அரசு உருவாகும்

## பழனி திகாம்பரம் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ. 8

மக்கள் எழுச்சி மூலமே இந்த அரசைவிரட்டியடிக்க முடியும். சஜித் பிரேமதாஸ தலைமையில் மக்களுக்கானதொரு அரசு உருவாகும்." என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியாமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பாதீடு ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் பொகவந்தலாவையில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொய்யுரைத்து அதன் மூலம் ஆட்சியை முன்னெடுப்பதற்கே இந்த அரசு முயற்சிக்கின்றது. இன்று பொய் கூறுவதில் சிறப்பு தேர்ச்சியும் பெற்றுள்ளது. நாட்டு மக்கள் தாங்கிக் கொள்ள முடியாத வகையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால்தான் மக்கள் வீதியில் இறங்கி போராடுகின்றனர். மக்கள் போராட்டங்கள் மூலமே இந்த அரசை விரட்டியடிக்க முடியும். சஜித் தலைமையில் மக்களுக்கு நன்மை பயக்கும் அரசொன்றை நாம் உருவாக்குவோம்.

சேதனப் பசளை திட்டத்தை ஒரே நாளில் செயற்படுத்தி விடமுடியாது. அதற்கு நீண்டகாலத் திட்டம் வேண்டும். ஒரே தடவையில் செய்வதற்கு முற்பட்டதால் தான் இன்று விவசாயிகள் போராடுகின்றனர். இதனால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, விவசாயிகளுக்கு உடனடியாக உரத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்"- என்றார். (த)

# விடத்தல்தீவு கிராமம் வெள்ளத்தில் தத்தளிப்பு

மன்னார்,நவ.8

மன்னார் மாவட்டத்தில், தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்துக்குள், கடல் நீர் உட்புகுந்துள்ளது. இதனால் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், விடத்தல்தீவு கிராமத்துக்குச் சென்று நிலைமையை அவதானித்தார். பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்தார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.(ஒ-4-56)

# அமைச்சரவை முழு அளவில் தோல்வி! பொறுப்புகள் தந்தாலும் ஏற்கமாட்டோம்

## அரசின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பகிரங்கமாகத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 8

'அரசு தோல்வி கண்டுள்ளது. தற்போதைய அமைச்சரவை முழு அளவில் தோல்வி கண்டுள்ளது. மிகவும் மோசமான நிலைமையிலேயே உள்ளோம். இதனால் ஆட்சியை முன்னெடுப்பதற்கு கடினமாக உள்ளது. தீர்மானங்கள் எடுக்கும் நிலைமையில் நாம் இல்லை. எனவே, தற்போது பொறுப்புகள் வழங்கப்பட்டாலும் அதனை ஏற்கப்போவதில்லை. மிகவும் கவலையுடன் மௌனித்துள்ளோம்.

இவ்வாறு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.

"அரசின் இயலாமை வெளிப்பட்டு, அரசு மீதான மக்களின் நம்பிக்கை இல்லாது போயுள்ளது.

இதனால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூறுவதை மக்கள் நம்புவதில்லை.

இந்த நிலைமை எதிர்வரும் தேர்தல்களில் பெருமளவில் தாக்கம் செலுத்தும். எனவே, தவறுகளை அவசரமாகத் திருத்திக்கொண்டு மக்கள் மயப்பட்ட ஆட்சியை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மாற்று அரசியல் சக்தி ஆட்சிப்பீடம் ஏறுவதைத் தவிர்க்க இயலாது" என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

"நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்களின் வாழ்வதாரப் பிரச்சினைகளை கையாள்வதில் அரசு தோல்விக்கண்டுள்ளது.

கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றமே இதற்குக் காரணம்" என்று ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான அநுரபிரிய தர்ஷன யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த உள்ளிட்டவர்கள் விமர்சித்துள்ளனர். (த-22)

# வெளிநாடுகளுக்குச் செல்வதால் மக்களின் எதிர்காலம் வளமாகும்

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



**கொழும்பு, நவ. 8**
**மக்கள் வெளிநாட்டுக்குச் செல்வது பிரச்சினைக்குரியதல்ல. அது அவர்களின் எதிர்காலத்துக்குச் சிறந்ததாகும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தங்களது வாழ்க்கையை மிகவும் சிறந்ததாக்கவும், வருமானத்தை அதிகரித்துக்கொள்ளவும் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

அது தவறான விடயமில்லை. வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் எப்போதும் அந்த நாடுகளிலேயே வாழ்வதில்லை. இவ்வாறு வெளிநாடுகளுக்குச் செல்லும் பெரும்பாலானோர் மீண்டும் நாடு திரும்புகின்றனர்.

அத்துடன், நாட்டுக்குப் பெருமளவான அந்நிய செலாவணியை அவர்கள் பெற்றுத் தருகின்றனர் - என்றார். (ம)


# தரம்-10,11,12,13 வகுப்புகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, நவ. 8
கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக மூடப்பட்டுள்ள சகல பாடசாலைகளையும் மீள ஆரம்பிக்கும் வேலைத்திட்டத்துக்கமைய, அதன் இரண்டாம்கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.
அதற்கமைவாக, தரம் 10,11,12 மற்றும் 13 தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கை இன்று ஆரம்பமாகின்றன என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். சுகாதார வழிகாட்டல் ஆலோசனைகளுக்கு அமைவாக மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவது பெற்றோரின் பொறுப்பாகும்.
மாணவர்களும் இதுதொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இதேவேளை, ஆரம்ப பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. சுகாதார பரிந்துரை கிடைத்தவுடன் தரம் ஒன்றிலிருந்து 9 வரையான வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (து-இ)

# புதையல் தோண்டச்சென்ற மூவர் முல்லையில் கைது

முல்லைத்தீவு, நவ. 8
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதையல் தோண்டச்சென்றனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்கள் புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
நீர்கொழும்பு, அநுராதபுரம் மற்றும் பொலனறுவை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நபர்கள் புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியவேளை, விசாரணை மேற்கொண்டபோதே புதையல் தோண்ட வந்தவிடயத்தைக் கூறியுள்ளனர்.
விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-19)

# வடக்கு கல்வி அமைச்சின் உதவிச் செயலராக சுரேந்திரன்



யாழ்ப்பாணம், நவ. 8
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்த சின்னத்தம்பி சுரேந்திரன் கடந்த 3 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாண பிரதம செயலாளர் அவருக்குரிய நியமனக் கடிதத்தை வழங்கினார்.
உடுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த சி. சுரேந்திரன் வடக்கு மாகாணத்தில் மாகாண பொது நிர்வாக செயலகத்தில் முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த 'சுப்றா' தரத்தில் கடமையாற்றியபோது இலங்கை நிர்வாக சேவை (SLAS - III) மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்து கொழும்பு உள்நாட்டலுவல்கள் அமைச்சில் உதவிச் செயலாளராகக் கடமையாற்றியநிலையில், வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு இடமாற்றலாகி நியமனம் பெற்றுள்ளார். (து-50)

# கொக்குவில் மரணநிகழ்வில் வாள்வெட்டுக்குழு அடாவடி

யாழ்ப்பாணம், நவ. 8
கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அங்குள்ள வராகி அம்மன் கோவிலடியில் நேற்றுமுன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்கு மரண வீடொன்றில் இளைஞர்கள் தோரணம் கட்டிக்கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் முகத்தை மறைத்தபடி வந்த மூவரே இளைஞர்களை விரட்டி விரட்டி தாக்கியுள்ளனர். இதில் 20 வயதான இளைஞர் ஒருவர் கை, காலில் வெட்டுக்காயம் ஏற்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (து-இ)




**கந்தசட்டி விரதக்கதை உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். சூரனையும் அவன்ர தம்பிமாரையும் முருகன் அழிச்சதைத்தான் கந்தசட்டியெண்டு விரதம் பிடிக்கிறம். சூரன் பொல்லாத ஆள். அவன்ர ஒரு தலையை விழுத்த ஓடிப்போய் இன்னொரு தலையோட வருவான். இப்பிடி முருகனும் வெட்ட வெட்ட சூரனும் தலையை மாத்திமாத்தி ஒட்டிக் கொண்டேயிருந்தான். பிறகு மாமரம், சேவல், மயில் எண்டு உருவத்தையும் மாத்தவெளிக்கிட்டான். கடைசிமட்டும் சூரனை முருகனால அழிக்கவே முடியேலை. தன்ர வாகனமா மாத்தினது தான் மிச்சம். இந்தச் சூரன் மாதிரி ராக்கிங் சூரனையும் அழிக்கேலாது போலதான் கிடக்குது. இப்ப ராக்கிங் செய்றதுக்கு சாமி கும்பிடுறதையும் ஒரு சாட்டா மாத்திப்போட்டினம் எண்டால் பாருங்கோவன்.**

**கொரோனாவுக்குப் பிறகு கம்பஸ் ஒழுங்கா இயங்கேலை. இந்த முறை பட்டமளிப்புக்கூட ஒன்லைன்லதான் நடந்தது. இப்பிடிப்பட்ட நிலையில புதுசா கம்பஸூக்கு எடுபட்டவைய ஒரேயடியாச் சந்திக்கிறதோ அவைக்கு தங்கட விலாசத்தையும் வீரத்தையும் காட்டுற ராக்கிங் எண்ட குரங்குச் சேட்டை செய்யுறதுக்கோ 'சீனியர்ஸூக்கு' வழியில்லாமல் போட்டுது. போனமுறை வட்ஸப் குரூப்புகளை உருவாக்கி அசிங்கமான முறையில ராக்கிங் செய்து கொஞ்சப்பேர் பிடிபட்டவை. அதால வட்ஸப் ராக்கிங் ஆபத்து எண்டது 'சீனியர்ஸூக்கு' தெரிஞ்சு போச்சு.**

**இந்த நிலைமையிலதான் இந்தமுறை தீபாவளிக்கு ஜூனியர்ஸ நல்லூருக்கு சாமி கும்பிட வாங்கோ எண்டு சீனியர்ஸ் 'அன்பாக' அழைப்பு விட்டிருக்கினம். 'சீனியர்ஸின்ர' சொல்லைத் தட்டேலுமோ? அதால 'ஜூனியர்ஸ்' எல்லாரும் வெருண்டடிச்சுக் கொண்டு போச்சினம். முன் வீதியில எல்லாரயும் இருத்திவைச்சு தங்கட குரங்குச் சேட்டையளை 'சீனியர்ஸ்' காட்டத் தொடங்கிச்சினம். அண்டைக்குத்தான் கந்தசட்டி விரதம் தொடக்கம். கோயிலுக்கு வந்த விரதகாரரெல்லாம் கம்பஸ்காரரின்ர கழிசறை வேலைகளைப் பார்த்து காறித்துப்பாத குறையா சாமி கும்பிடப்போட்டினம்.**

**ஆனால், சூடு, சுரணை, வெக்கம் ஒண்டுமில்லாத கம்பஸ் குஞ்சுகள் தங்கட ராக்கிங் லீலைகளை முருகன்ர சந்நிதியில தொடர்ந்திச்சினம். எப்பிடி சாமி கும்பிடுறது? எப்பிடி விழுந்து கும்பிடுறது? எப்பிடி அரோகரா எண்டு சொல்லுறது? எண்டெல்லாம் விளங்கப்படுத்திப்போட்டு, அந்த இடத்தையே ஒரு 'தெய்வீகமா' மாத்திச்சினம். சாமி கும்பிடப் போனால் தட்சனை குடுக்கத்தானே வேணும். அதால பெரிய மனசு பண்ணி 'சீனியர்ஸ்' தங்கட ஹெல்மட்டுகள கவிட்டுப்பிடிக்க 'ஜூனியர்ஸ்' தங்களிட்ட இருந்த எல்லாக் காசையும் உருவியெடுத்து அதுக்குள்ள போட்டிச்சினம். சாமியும் கும்பிட்டாச்சு. தட்சணையும் குடுத்தாச்சு. ஆனால், பிரசாதம் இல்லாட்டிக்கு என்னெண்டு கோயில் தரிசனம் பூர்த்தியாகும்? எண்டு 'சீனியர்ஸ்' மாருக்கு ஒரே கவலை. பிறகென்ன 'ஹெல்மட்' கலெக்சன்ல கிடைச்ச காசோட 'சீனியர்ஸ்' பக்கத்தில இருந்த ஐஸ்கிறீம் கடைப்பக்கம் முன்னாலபோக பின்னால 'ஜூனியர்ஸூம்' இழுபட்டுப் போச்சினம்.**

**கந்தசட்டி விரதத்தைக்கூட கன்றாவியா மாத்தின கம்பஸ்காரருக்கு அரோகரா!**



**- பட்சி**

# நிறுவனங்களின் கட்டளைக்கு அமைய செயற்படும் அதிகாரிகளால் தட்டுப்பாடு

## லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் குற்றச்சாட்டு

**கொழும்பு, நவ. 8**

**சந்தையில் சமையல்எரிவாயு தட்டுப்பாட்டின் பின்னணியில் நாட்டுக்கு சமையல் எரிவாயுவை விநியோகிக்கும் வெளிநாட்டு நிறுவனமும், அவர்களின் கட்டளைக்குஅமைய செயற்படும் அதிகாரிகளும் உள்ளார்கள். சேவை விநியோக ஒப்பந்தத்தை மேலும் இரண்டு வருட காலத்துக்கு நீடிக்குமாறு தொடர்ந்து விடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு அடிபணியாததன் காரணமாக எரிவாயு விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெஸார ஜயசிங்க தெரிவித்தார்.**




அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மிடம் எரிவாயு குறைந்தளவுகூட இல்லை. துறைமுகத்துக்கு எரிவாயு கப்பல் வந்துள்ளது. எனினும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியவில்லை. ஒப்பந்தத்தை நீடிக்காவிடின் எரிவாயுவை விநியோகிக்க முடியாது என அந்த நிறுவனம் அச்சுறுத்துகிறது. லிட்ரோ நிறுவனத்துக்கு தற்போதுஎரிவாயுவிநியோகிக்கும் நிறுவனத்தின் அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து எரிவாயுவை கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தை மேலும் இரண்டுவருட காலத்துக்கு நீடித்தால், லிட்ரோ நிறுவனம் சுமார் 10 பில்லியன் நஷ்டத்தை எதிர்கொள்ள நேரிடும். லிட்ரோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் குறித்த நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் காரணமாக சர்வதேசத்தில் குறைவான விலையில் எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. ஒருதரப்பினர் மாத்திரம் எரிவாயு சிலிண்டரை விநியோகிக்கின்றனர். மோசடியாளர்கள் ஒரு தரப்பினரே. கடமையைச் சரிவர செய்யும் தரப்பினருக்கு இடையூறு விளைவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே கடந்த மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் இந்தமாதம் முதலாம் திகதி வரை எரிவாயுவை விநியோகிக்க முடியவில்லை - என்றார். (ம)

# எரிவாயு மாபியா தொடர்பில் விசாரணையை நடத்துங்கள்

கொழும்பு, நவ. 8

எரிவாயு மாபியா ஒன்று செயற்படுவதாக வெளியான தகவல் குறித்து சுயாதீன விசாரணையொன்றை நடத்துமாறு லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் அனில் கொஸ்வத்த கோரிக்கை விடுத்துள்ளார்.

கடிதமொன்றின் ஊடாக நிதி அமைச்சிடம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். நாட்டில் எரிவாயு மாபியா ஒன்று செயற்படுவதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தற்போதைய தலைவர் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# சீனாவின் உர நிறுவனத்துக்கு நிதி வழங்குவதற்குத் தடை

மிகவும் அபாயகரமான பக்ரீறியாக்களுடன் இலங்கைக்கு அனுப்பப்பட்ட சீன உரக்கப்பலை இலங்கைக்குள் அனுமதிக்க விதிக்கப்பட்ட தடையைத் தொடர்ந்து, குறித்த சீன நிறுவனத்துக்கு நிதி வழங்குவதை தடைசெய்யும் வகையில் விதிக்கப்பட்ட தடை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

இந்த உத்தரவை கொழும்பு வணிக மேல் நீதிமன்றின் நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ விதித்துள்ளார்.

தங்களின் சேதனப் பசளை மாசுபடவில்லை. ஆய்வக அறிக்கையை தவறாக இலங்கை புரிந்துகொண்டுள்ளது என்று குறிப்பிட்டு, சீனா - இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது. திறந்த ஏலத்தில், சீனாவின் குறித்த நிறுவனம் 99 ஆயிரம் மெட்ரிக் தொன் உரத்தை இலங்கைக்கு வழங்குவதற்கான உரிமையை வென்றது. ஆனால், அந்த உரத்தில் ஆபத்தான பக்ரீறியாக்கள் இருந்தமை ஆய்வக பரிசோதனையில் நிரூபணமானது. மூன்றுமுறை மேற்கொள்ளப்பட்ட ஆய்வக பரிசோதனையின் பிரகாரமே இவ்வாறு நிராகரிக்கப்பட்டது. ஆனால் சீனா அதனை ஏற்றுக்கொள்ளாமல். கடுமையாக விமர்சித்தது. இத்தகைய பின்னணியிலேயே மேற்படி வழக்கு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சிறுபான்மையினரை அழிக்கும் தீவிரமான செயலில் ஆட்சியாளர்

## ரிஷாத் பதியுதீன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 8



எம்மை பயமுறுத்தும் மோசமான காலத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மூத்த தலைவர்கள் கடந்த காலங்களில் பெற்றுத்தந்த உரிமைகளை பறித்தெடுக்க கோஷமிடும் ஆட்சியாளர்கள், சிறுபான்மை மக்களுக்கு அழிவை உண்டாக்க இறைவனை நிந்தித்த ஒரு தேரரை, 'ஒரே நாடு ஒரே சட்ட' செயலணிக்கு தலைவராக நியமித்து, எமக்கு மற்றுமொரு அச்சுறுத்தலை விடுத்து 'நினைத்ததைச் செய்வோம் நீங்கள் இணங்கிச் செல்ல வேண்டும்' என்ற செய்தியைக் கூறியுள்ளார்கள். இவ்வாறு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். கிண்ணியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இஸ்லாமியரின் பெயரில் பல சதிகள் இடம்பெற்று முஸ்லிம்களுக்கு கெட்ட பெயரை உண்டாக்கி விட்டன.

நான் அமைச்சராக இருந்தபோது உணவுப்பொருள்களை கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வதில் மிகக்கடுமையாக இருந்தோம்.

மக்களின் பக்கமே முடிவுகளை எடுத்தோம். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு உற்பத்தியாளர்கள், நிறுவனங்களைச் சந்தித்துப் பேசினோம்.

அப்படிக் கலந்துரையாடித்தான் உணவுப்பொருள்களைக் கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு வழங்கினோம்.

விக்னேஸ்வரன், சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுமந்திரன் போன்றோர்கள் உட்பட லக்ஷ்மன் கிரியெல்ல, ராஜித போன்ற பலருமாக 44 பேரளவில் கையெழுத்திட்டு, நாடாளுமன்ற மரபுகளை கோடிட்டுக் காட்டி நீதியையும், சட்டத்தையும் முன்னிறுத்தி சபாநாயகரிடம் எனக்காக நீதியைக் கேட்டார்கள். சட்டமா அதிபர் இது தொடர்பில் விளக்கமளிக்க கோரினார்கள் - என்றார். (கு-இ)

# 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற செயலணியைக் கலையுங்கள்

## ஜனாதிபதியிடம் ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, நவ. 8

நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற செயலணியை இல்லாதொழிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுபல சேனா அமைப்பின் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணியானது, தேசிய ஒற்றுமையை சீர்குலைத்து வருகின்றது என்று ஐக்கியத் தேசியக் கட்சியின் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

செயலணியொன்றை நியமித்து, அமைச்சரவையில் விவாதிக்காமல், நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபரின் அதிகார வரம்பில் இருந்து நீக்கும் நடவடிக்கை கேலிக்குரியது என்றும் இது ஜனாதிபதியின் அரசமைப்புக்கு முரணான செயல் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-இ)

# இறக்குமதி தேக்கப்படுவதை தடுக்க விலைக் கட்டுப்பாடு நீக்கமாம்

## புதுக்கதைவிடும் நுகர்வோர் அதிகார சபை


இறக்குமதியாளர்கள் அத்தியாவசியப் பொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாடுகளை உருவாக்கி, இறக்குமதியைத் தேக்கி வைப்பதைத் தவிர்ப்பதற்காகவே விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது. - என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளின் விளைவாகவே சமையல் எரிவாயு, சீனி, பால் மா போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இறக்குமதியாளர்கள் சட்ட ரீதியற்ற சந்தை விலையில் வெளிநாட்டு நாணயத்தை (அமெரிக்க டொலர்) கொள்வனவு செய்கிறார்கள். இதன் விளைவாக, அவர்களால், ஒழுங்குபடுத்தப்பட்ட விலையில் பொருள்களை விற்க முடியவில்லை. இறக்குமதியாளர்கள் நியாயமற்ற வகையில் இலாபம் ஈட்டினால், கட்டுப்பாடுகள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதன் காரணமாக மக்கள் கோபத்தில் இருப்பதை உணர முடிகிறது. அந்நியச் செலாவணியின்றி அரசாங்கத்தால் விலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அத்தியாவசியப் பொருள்களின் மீதான விலைக் கட்டுப்பாட்டை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றுமதி மற்றும் சுற்றுலா மூலம் நாட்டுக்கு அமெரிக்க டொலர் கிடைக்கும் வரை நாங்கள் காத்திருக்கிறோம் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (கு-இ)

# குறைகிறது தடுப்பூசியின் செயற்றிறன் டிசெம்பரில் தொற்று பெருக வாய்ப்பு!

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு



கொழும்பு, நவ. 8

கொரோனாப்பரவல் தொடர்பான உலகின் போக்குகள் குறித்த ஆய்வுகளின் படி, எதிர்வரும் டிசெம்பர் மாதம் கொரோனாத்தொற்று ஒப்பீட்டளவில் அதிகரிக்கும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். கொரோனாத் தடுப்பூசி தொடர்பில் அமெரிக்கா நடத்திய புதிய ஆய்வு தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் பெருவாரியாக பயன்படுத்தப்படும் மூன்று கொரோனாத் தடுப்பூசிகளினதும் செயற்றிறன் காலம், கணிசமான அளவில் குறைவடைவதாக புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

8 இலட்சம் அமெரிக்கர்களிடையே நடத்தப்பட்ட இந்த ஆய்வில் பைசர், மொடர்னா மற்றும் ஜொன்சன் அன்ட் ஜொன்சன் முதலான கொரோனாத்தடுப்பூசிகளின் செயற்றிறன் குறித்து ஆராயப்பட்டுள்ளது. இதன்போது, பைசர் தடுப்பூசியின் செயற்றிறன், கடந்த மார்ச் மாதம் 89.2 சதவீதத்திலிருந்து, 6 மாதங்களின் பின்னர், 58 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

மொடர்னா தடுப்பூசியின் செயற்றிறன் குறித்த காலப் பகுதியில், 86.9 சதவீதத்திலிருந்து, 43 சதவீதம் வரையில் குறைவடைந்துள்ளது. ஜொன்சன் அன்ட் ஜொன்சன் தடுப்பூசியின் செயற்றிறன் 86.4 சதவீதத்திலிருந்து, 13 சதவீதம் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, தடுப்பூசியின் மூலம் கிடைக்கும் பாதுகாப்பு குறைவடைவதாக கூறுவது நல்ல விடயமல்ல. இலங்கையிலும், பைசர் மற்றும் மொடர்னா தடுப்பூசிகள் பெருமளவில் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்துகின்றது. மூன்றாம் தடுப்பூசியை வழங்குவதையும், முகக்கவசத்தை அணிவதையும் ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர். எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஆகும்போது நிலைமை சிறந்ததாக அமையாது என்றே இந்த ஆய்வில் தெரிவிக்கப்படுகின்றது. - என்று சன்ன ஜயசுமன மேலும் தெரிவித்தார். (து-இ)

# உயிரிழந்த மீனவர்கள் இருவருக்கு காப்புறுதி

மன்னார்,நவ.8

மன்னார் மாவட்டத்தில் இயற்கையான உயிரிழப்பைச் சந்தித்த கடற்றொழிலாளர்கள் இருவருக்கான காப்புறுதி, அவர்களது குடும்பத்தினரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

கடற்றொழிலாளர்களான ஏ.ஜே.எம். நிஜாம் மற்றும் கே.திருச்செல்வம் ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன. அதேவேளை சமுர்த்திப் பயனாளிகளைப் பலப்படுத்தும் வேலைத்திட்டத்தில், மீன்பிடி அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்ட 26 பயனாளிகளுக்கும் காசோலைகள் வழங்கப்பட்டன.

பாசி வளர்ப்பு , மீன் வளர்ப்பு உள்ளிட்ட திட்டங்கள் மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்துக்கு மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 443 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் முதற்கட்டமாக 26 பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கப்பட்டன. மன்னார் மாவட்டச் செயலகத்தில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மன்னார் மாவட்டச் செயலர் திருமதி.ஏ.ஸ்டான்லி டிமெல், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர். (ஒ-4,56)



# பாடத்திட்டத்தில் பால்நிலைக் கல்வி

## முன்மொழிவை வழங்கியது முன்னணியின் மகளிர் அணி

யாழ்ப்பாணம், நவ. 8

பால்நிலை சமத்துவம்பேணும் கற்கை நெறியை பாடத்திட்டத்தினுள் உள்வாங்குவது தொடர்பான முன்மொழிவொன்றை, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியினர் தயாரித்துள்ளனர்.

அதை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் அண்மையில் கையளித்தனர்.

முன்பள்ளியிலிருந்தே பாடத்திடத்தின் மூலம் பால்நிலை சமத்துவத்தை கற்பிக்கவேண்டும் என்ற கருப்பொருளிலமைந்த குறித்த முன்மொழிவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித்தலைவி வாசுகி சுதாகர் மற்றும் மகளிர் அணி செயலாளர் கிருபா கிரிதரன் ஆகியோர் கையளித்தனர். (து)

# சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் பூஸ்டர் தடுப்பூசியைத் தவறவிடாதீர்!

## மருத்துவர் யமுனாநந்தா அறிவுறுத்து




யாழ்ப்பாணம், நவ. 8

பூஸ்டர் தடுப்பூசியானது, கொரோனாத்தொற்றின் தீவிரத்தை 92 வீதம் குறைக்கும். கொரோனாத்தொற்றால் ஏற்படும் இறப்பு வீதத்தை 81 வீதம் குறைக்கும். பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றவர்களில் மருத்துவமனைக்கான அனுமதி 93 வீதம் குறைவடைகின்றது. எனவே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பூஸ்டர் தடுப்பூசியை சுகாதார உத்தியோகத்தர்கள் அனைவரும் தவறவிடாது பெற்றுக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர். சி.யமுனாநந்தா.

பூஸ்டர் தடுப்பூசி செயற்றிட்டம் வயதானவர்களுக்கும் ஏனைய நாள்பட்ட நோயுடையவர்களுக்கும் இன்றியமையாதது. எனவே, பூஸ்டர் தடுப்பூசியை பெறுவதற்குச் சந்தர்ப்பம் உடையவர்கள், இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடாமல் தடுப்பூசியை அச்சமில்லாது பெற்றுக் கொள்ள வேண்டும்.

யாழ். போதனா மருத்துவமனையில் மூன்றாவது தடுப்பூசியை இதுவரை 30வீதமானவர்களே பெற்றுள்ளனர்.

எனவே, ஏனையவர்களும் இதனை பெற்றுக் கொள்ள முன்வரல் வேண்டும். - என்று, பிரதிப்பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். (து)



# பழைய முறிகண்டியில் தொடரும் மணலகழ்வு

முல்லைத்தீவு,நவ.8


முல்லைத்தீவு பழையமுறிகண்டி கிராமத்தில் நாள்தோறும் அகழப்படும் மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது என்று துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் கந்தசாமி சகுந்தலாதேவி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பத்தாண்டுகளாக பழைய முறிகண்டி கிராமத்தில் இருந்து மணல் கடத்தப்படுகின்றது. இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர், துணுக்காய் பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளுக்கும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டது. எனினும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக பழையமுறிகண்டி கிராமம் பெரும் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. பழையமுறிகண்டி குளத்தின் அணைக்கட்டுக்கு அருகாமையில் மணல் அகழ்வு இடம்பெறுவதால், குளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்படலாம்.

நாள்தோறும் கிராமத்தில் இருந்து இரண்டு டிப்பர்களில் மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் கிராமத்தின் முதன்மை வீதியும் சேதமடைந்துள்ளது. அத்துடன் பெருமளவு மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன- என்றார். (ஒ-4)


# நுழைவாயில் திறப்பு விழா




சாவகச்சேரி, நவ. 8

மிருசுவில், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் நுழைவாயில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வித்தியாலய பழைய மாணவனும் சிரேஷ்ட சட்டத்தரணியுமாகிய சீ.வி.விவேகானந்தன் நினைவாக அவரது குடும்பத்தினரால் புனரமைக்கப்பட்ட நுழைவாயில், வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஜனாதிபதி சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரனும் சிறப்புவிருந்தினராக ஓய்வுநிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-ரி1-9)



## கொரோனாவை அழிப்பதே அரசின் முதலாவது இலக்கு

கொழும்பு, நவ.8
நாட்டு மக்களை கொரோனாவிலிருந்து மீட்டெடுப்பதே அரசின் முதலாவது இலக்கு. எனவே மக்களும் அரசின் நெருக்கடிகளைப் புரிந்து கொள்ளவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
கொரோனா வைரஸிலிருந்து 21 மில்லியன் மக்கள் உயிரைப் பாதுகாத்த பெருமை இந்த அரசுக்கு உள்ளது. அதனால் அனைத்து குடிமக்களும் அரசுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

சீனி மற்றும் சிமெந்து விலை உயர்வைவிட கொரோனா வைரஸ் மிகப்பெரிய பிரச்சினையாகும். 24 வருடங்களாக நிலவும் ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடுகள் தொற்று நோய்க்கு மத்தியில் தீர்க்கப்பட முடியாதவை.

தற்போதைய சூழ்நிலை சாதாரணமானது அல்ல. அதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். இந்த நெருக்கடிக்குள் பட்டினியால் எவரும் சாகவில்லை என்பதையும் புரிந்துகொள்ளுங்கள். -என்றார். (ஒ-4)

# உணவுத்தட்டுப்பாட்டை மக்கள் மிகவிரைவில் எதிர்கொள்வர்!

## எதிர்க்கட்சித்தலைவர் சஜித் அறிக்கை



**கொழும்பு, நவ. 8**

**அரசின் குறுகிய, தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாக, உரிய காலத்தில் தேவையான உரத்தை விநியோகிக்காமையால், விவசாய மக்கள் கைவிடப்பட்டுள்ளனர். இந்த நிலையால், ஒட்டுமொத்த நாட்டு மக்களும் பெரும் உணவுத் தட்டுப்பாட்டையும் பஞ்சத்தையும் எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.**

இவ்வாறு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிய ஊடக அறிக்கையில்,
2010 இல் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நாடாக இலங்கை வரவிருந்தது. தற்போது நிலைமை தலைகீழாகிவிட்டது. எமது நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒருபங்கு விவசாயத்துக்கு பயன்படுத்தப்படுகின்றது.

எமது நாட்டு மக்களில் நான்கில் ஒரு பகுதியினர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விவசாயத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு, தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். மொத்த உள்நாட்டு தேசிய உற்பத்தியில் 3.7 வீதம் விவசாயத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

வேளாண்மைத் தொழிலுடன் தொடர்புடைய குடும்பங்களின் எண்ணிக்கை 1.8 மில்லியனாகும்.

### கட்டுக்கதை

ரஜரட்டை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள சிறுநீரகப் பாதிப்புக்கு இராசயன உரமே காரணம் என கட்டுக்கதைகளை உருவாக்கி அது தொடர்பில் விஞ்ஞான ரீதியாகவோ அல்லது ஆய்வுகளையோ மேற்கொள்ளாது இரசாயன உரத்தை தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையானது தான்தோன்றித்தனமான செயற்பாடாகும்.

### 21 - 31 வீதம் வீழ்ச்சி

பதலேகொட நெல் ஆராய்ச்சி நிலையத்தின் ஊடாக பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பல தரப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் சேதனைப் பசளை மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வேளாண்மையில் 21 வீதம் தொடக்கம் 31 வீதம் வரை அறுவடையில் வீழ்ச்சி ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பின்னணியில் எந்தவொரு தொழில்நுட்ப அறிவோ விஞ்ஞான ஆய்வு ரீதியான முடிவுகளோ இல்லாமல் விவசாயிகள் மேற்கொள்கின்ற உற்பத்தி, அறுவடை செய்யப்படுகின்றபோது அதைவிடவும் அறுவடை குறைவடைய வாய்ப்புக்கள் உள்ளன என்று விவசாய ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நாட்டிலுள்ள விவசாய மக்களை விவசாய நிலங்களிலிருந்து ஒதுங்கச்செய்து அந்த நிலங்களை தரிசு நிலங்களாக மாற்றி அந்த நிலங்களை சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக கொள்ளையடிக்கின்ற மோசடிமிக்க நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுகின்றதா என்கின்ற சந்தேகமும் எழுகின்றது.

### பணம் இருந்தாலும் உணவு இருக்காது

ஓரளவு பணம் சம்பாதித்தாலும் அன்றாடத் தேவைகளுக்கு அவசியமான உணவை கொள்வனவு செய்ய முடியாமற் போகின்றநிலை எதிர்காலத்தில் உருவாகாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### பெயரளவில் இழப்பீடு

மேலும் பயிர்கள் சேதமடைந்து, நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதாகப் பெருமை பேசினாலும் அதற்காக எந்தவொரு பொறிமுறையோ அல்லது திட்ட வரைபோ இது வரையும் அரசு கொண்டுவரவில்லை. - என்றுள்ளது. (து)

# தோட்டத்தொழிலாளர்களும் நாளை ஆசிரியர்களுக்காகப் போராடுவார்கள்

## மனோ எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ. 8
ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க ஒன்றியம் நாளை செவ்வாய்க்கிழமை நடத்தும் தேசிய எதிர்ப்புத்தின ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாக, தமது சம்பளம், விலைவாசி பிரச்சினைகளையும், ஆசிரியர்களின் பிரச்சினைகளையும் முன்வைத்து, தோட்டத் தொழிலாளர்கள் மலைகளில், தமது வேலைத்தளங்களில் இருந்தவாறு பகலுணவு வேளையில் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கோரியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், ஜ.ம.மு. இரத்தினபுரி அமைப்பாளர் மற்றும் கூட்டணியின் ஆசிரியர், விவகார பொறுப்பாளர் சந்திரகுமார் ஆகியோரை, இலங்கை ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க ஒன்றிய பிரதிநிதிகளான வண. யல்வெல பஞ்சாசாகர தேரர், ஜோசப் ஸ்டாலின், மஹிந்த ஜயசிங்க ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் சந்தித்து உரையாடினார்கள்.

அதன்போது இலங்கை ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க ஒன்றியம் நாளை செவ்வாய்க்கிழமை நடத்தவிருக்கும் அடையாள தேசிய எதிர்ப்பு தினத்துக்கு, தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஆதரவை கோரினர்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட முற்போக்கு கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்ததோடு, மலையக மக்களையும் போராடுமாறு அழைப்பு விடுத்தது. அதேவேளை ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க ஒன்றியம் பிரதிநிதிகளுக்கு, தோட்டத்தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் மனோ கணேசன், பழனி திகாம்பரம் ஆகியோர் விரிவாக எடுத்துக் கூறினர்.

எதிர்காலத்தில் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகளையும் பொதுத்தேசிய தொழிற்சங்க வேலைத்திட்டத்தில் இணைத்துக்கொள்ள இது ஓர் ஆரம்பமாக அமையவேண்டும் என இரு தரப்பினரும் இணங்கினர். (கு-இ)



# அரசு மீது மக்களுக்கு கடும் அதிருப்திநிலை!

## ஆளும்கட்சி எம்.பி. 'சேம் சைட் கோல்'

கொழும்பு, நவ. 8
அரசின் நடவடிக்கைகளால் மக்களிடம் திட்டு வாங்க நேரிட்டுள்ளது என்று ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

இந்துருவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;
இந்த அரசை மக்கள் திட்டித் தீர்க்கின்றனர். கிராமங்களுக்கு சேவைகளை வழங்காத காரணத்தால் மக்கள் திட்டுகின்றனர். உங்களுக்கு தேநீர் அருந்த சீனி இல்லை என்றால் நீங்கள் மஹிந்த ராஜபக்ச, பந்துல குணவர்த்தன ஆகியோரை மட்டுமன்றி, இறுதியில் எங்களையும் திட்டுவீர்கள். அதுதான் நடக்கின்றது - என்றார். (ம)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காசு ..பணம்.. துட்டு....!


சில காலங்களுக்கு முன்னர் வங்கியொன்றில் ஒரு நூதனத் திருட்டு இடம்பெற்றது. அந்த வங்கியின் ஊழியர் ஒருவர், அங்கு சேமிப்புக்கணக்கு வைத்திருக்கும் சகலரின் கணக்கில் இருந்து மாதாந்தம் 23 சதம் தன்னுடைய கணக்குக்கு வந்து சேருமாறு கணினி மென்பொருளில் தகிடுதத்தம் செய்திருந்தார். அதன்படியே மாதாந்தம் அவருடைய கணக்குக்கு இலட்சக் கணக்கில் பணம் போய்ச் சேர்ந்துகொண்டிருந்தது. ஆனால், தங்கள் பணம் அப்படிப் பறிபோவதை வாடிக்கையாளர்கள் கடைசி வரை உணரவேயில்லை. ஏனெனில் மாதாந்தம் வெறும் 23 சதம் தங்கள் கணக்கில் கழிக்கப்படுவதை ஒரு விடயமாக எவரும் பொருட்படுத்தவேமாட்டார்கள். ஆனால் அந்தப் பலவீனத்தை பயன்படுத்தி குறித்த வங்கி ஊழியர் இலட்சாதிபதியாகி விட்டார்.

இப்போது அரசாங்கம் செயற்படுத்த முனைந்துள்ள திட்டமொன்று, அந்த நூதன வங்கி மோசடியைத்தான் நினைவுக்கு கொண்டு வருகின்றது. அரசபணியில் இருந்து இளைப்பாறியோருக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையில் ‘அக்ரஹார’ காப்புறுதிக்காக மாதாந்தம் 600 ரூபாவை கழிக்கவுள்ளது அரசாங்கம். இதன்மூலம் நாடளாவிய ரீதியில் உள்ள இலட்சக்கணக்கான ஓய்வூதியர்களிடம் இருந்து மாதாந்தம் 600 ரூபா படி, பெருந்தொகையான பணம் அரசாங்கத்துக்குச் செல்லப்போகின்றது. கிட்டத்தட்ட இதுவொரு பகல்கொள்ளையே. பணியில் இருந்து இளைப்பாறிய பின்னர் கூட, முதிய பிரஜைகளை நிம்மதியாக இருக்கவிடாமல், அவர்களின் ஓய்வூதியப் பணத்தைக் கூட அரித்துத் தின்னும் வேலையே இது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏனைய நிறுவனங்கள் புதிதாகக் காப்புறுதிகளை வழங்குவது கிடையாது. அந்த வகையில்,மேலோட்டமாகப் பார்த்தால், முதியவர்களுக்கு காப்புறுதி என்பது நல்லதொரு திட்டம் போலவே தெரியும். அவ்வாறு இந்தத் திட்டத்தை உண்மையாகவே முதியோர் மீதுள்ள அக்கறையால் இந்த அரசாங்கம் கொண்டு வந்திருந்தால், ஏற்கனவே பாடசாலை மாணவர்களுக்கான ‘சுரக்ஷா’ காப்புறுதி போல இலவசமாக வழங்கியிருக்கலாம். அதாவது அந்தக் காப்புறுதிக்கு மாதாந்தம் எந்தவொரு தொகையும் செலுத்தத் தேவையில்லை.ஆனால், ஏதேனும் நோய்கள் வந்தாலோ, துன்பியலான சம்பவங்கள் நிகழ்ந்தாலோ அதற்கான இழப்பீட்டை அரசாங்கம் வழங்கும். அப்படி முதியோருக்கான ‘அக்ரஹார’வையும் பணம் பெறாமல் நடைமுறைப்படுத்தி இருக்கலாம். ஆனால் எந்தவழியில் பணத்தைச் சுரண்டி, தங்கள் பொக்கற்றுகளை நிறைக்கலாம் என்று காத்துக்கொண்டிருக்கும் ஆட்சியாளர்கள், ஓய்வூதியத்திலும் கைவைக்க முடிவெடுத்து விட்டார்கள்.

பெரும்பாலான முதியோருக்கு இந்தத் திட்டம் பற்றி எதுவுமே தெரியாது. அப்படி இருக்கையில் எப்படி தமக்கு ஏதும் நோய்நொடி வந்தால் அதற்கான காப்புறுதி இழப்பீட்டைக் கோருவார்கள்? அப்படி இழப்பீட்டைக் கோரினாலும், அந்த விண்ணப்பம் பல அலுவலகங்களுக்கு சுற்றியடித்து, காப்புறுதிப் பணம் வந்து சேர்வதற்கிடையில் போதும் போதுமென்றாகி விடும். ஏற்கனவே பல அரச ஊழியர்கள் ‘அக்ரஹார’ காப்புறுதிக்காக விண்ணப்பித்து விட்டு மாதக்கணக்கில் காத்திருக்கையில், முதியோருக்கு மட்டும் கண்ணிமைக்கும் நொடியில் காப்புறுதிப் பணம் கிடைக்கும் என எண்ணுவது அபத்தமே. எனவே காப்புறுதி என்ற பெயரில் சுரண்டப்படப்போகின்ற பணத்தின் பெருந்தொகை எந்தச் சேதாரமுமின்றி அரசாங்கத்துக்கு போய்ச் சேர்ந்துவிடும். இந்தத் திட்டத்தை முளையிலேயே கிள்ளியெறியப் போராட வருமாறு எதிர்க்கட்சி அழைப்பு விடுத்துள்ளது. ஆனால் என்னதான் போராடினாலும் இந்த அரசாங்கம் தான் நினைத்தபடி செய்யத்தான் போகின்றது. இன்று ஓய்வூதியத்தில் கைவைத்த அரசாங்கம், நாளை அரச ஊழியர்களின் சம்பளத்திலும் கைவைக்கும். பின்னர் குடிமக்கள் ஒவ்வொருவரினதும் அன்றாடச் சாப்பாட்டில் கூட தனக்கொரு பங்கு கட்டாயம் தர வேண்டுமென்று இந்த அரசாங்கம் சட்டம் போட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

பிணத்தை விற்றாலும் பரவாயில்லை காசு வந்தால் போதும் என்ற மனோநிலையில் இருக்கும் அரசாங்கத்திடம் இப்படியான, மக்களை வதைக்கும் திட்டங்களைத் தவிர வேறெவற்றை எதிர்பார்க்கமுடியும்...?




# பெரமுனவின் தாளத்துக்கு ஆட நாம் தயாரில்லை!!!

## மைத்திரி திடீர் ஆவேசம்



**கொழும்பு, நவ. 8**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேவைக்கேற்ப நாம் இருக்கத் தயாரில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'தாம் கூறும்படி இருக்க வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றனரே. அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?' என்று குறித்த ஊடகம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேறு எவரேனும் கூறும் விதத்தில் இருக்கத் தயாராக இல்லை என்று அதற்கு மைத்திரிபால பதிலளித்துள்ளார். (ஒ-22)

# இறந்தவர்களுக்கு அஞ்சலி சரவணபவனிடம் விசாரணை

மட்டக்களப்பு, நவ. 8

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட சத்துருக்கொண்டான் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும் கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 186 பேரின் நினைவாக சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தியமைக்காகத் தன்னிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட சத்துருக்கொண்டான் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும் கொண்டு செல்லப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட 186 பேரின் நினைவாக சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தியமைக்காக என்னிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த படுகொலை தொடர்பில் எவர் கொலையாளிகள் என்று சாட்சியங்கள்கூட பதிவு செய்யப்பட்ட நிலையில், அது தொடர்பில் எந்த விசாரணைகளையும் முன்னெடுக்காத பொலிஸார் குறித்த நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தியமைக்காக விசாரணை செய்கின்றனர்- என்றார். (ம)

நவம்பர் 2021

## வடமாகாண மரநடுகை மாதம்



“பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன் படுத்தும்போது பூமியிலுள்ள மிகச் சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்.

*– பிராங்க் லோயிட் றைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)*

# பத்தாண்டுகளுக்கு மேலாக கவனிப்பாரற்ற நந்திக்கடல்

முல்லைத்தீவு, நவ.8

**முல்லைத்தீவு நந்திக்கடலை ஆழமாக்கும் திட்டம் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக கிடப்பில் உள்ளது. அதேவேளை, வட்டுவாகல்பாலம் புனரமைத்தல், வெளிச்சவீடு அமைத்தல் ஆகிய திட்டங்களும் கிடப்பில் போடப்பட்டுள்ளன.**



போரின் பின்னர் மீள்குடியேற்றம் நடைபெற்ற பின்னர், சேறு தேங்கியுள்ள நந்திக்கடலைத் துப்புரவு செய்தல், கடுமையாக சேதமடைந்துள்ள வட்டுவாகல் பாலத்தைப் புனரமைத்தல் அல்லது புதிய இடத்தில் அமைத்தல், வெளிச்சவீடு அமைத்தல் ஆகிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு, மனுக்களும் கையளிக்கப்பட்டன. மாவட்டச் செயலகம் திட்டங்களை வரைந்து, மத்திய அமைச்சுக்கு அனுப்பி, பத்து வருடங்கள் கடந்தும், அதற்குரிய வேலைகள் தொடங்கப்படவில்லை.

அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் குறித்த மூன்று வேலைத் திட்டங்களையும் நிறைவேற்றாததன் காரணமாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழில் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஒ-4-13)

# வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்குமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம்,நவ.8

யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்தபோது, யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் குறித்த கோரிகையை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தின் தொன்மை வாய்ந்த நல்லூர் மந்திரி மனை, சங்கிலியன் சிலை, யமுனாஏரி உள்ளிட்டவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் நீண்டகாலமாக மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டம், ஏராளமான வரலாற்றுத் தொன்மங்களைக் கொண்டுள்ளது. அவற்றைப் பாதுகாப்பது எமது மூதாதையருக்கும், அடுத்து வரும் சந்ததிக்கும் நாம் செய்யும் கடமை என்றும் அவர் எடுத்துக்கூறினார். (ஒ-4,27)

# கால்நடைகளின் உறைவிடமாக மாறியது பேருந்து நிலையம்

முல்லைத்தீவு,நவ.8

முல்லைத்தீவு பேருந்து நிலை யம் கால் நடைகள் மற்றும் பறவைகளின் உறைவிடமாக மாறியுள்ளது.

முல்லைத்தீவில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் புதிதாக அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம், வேலைகள் நிறைவு பெறாமலே திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பேருந்து நிலையத்துக்குள் பேருந்துகள் சென்று திரும்ப முடியாத நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

பேருந்து நிலையத்தின் சூழல் அழகுபடுத்தப்பட வில்லை.

இது தொடர்பாக மாவட்டச் செயலாளர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டது. குறை பாடுகளைச் சுட்டிக்காட்டி யும், திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது கால்நடைகள், பறவைகளின் உறைவிடமாக பேருந்து நிலையம் மாறியுள்ளது என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த. அமலன் தெரிவித்துள்ளார். (ஒ-4,13)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
27.03.1960

மறைவு
09.10.2021

அமரர் குழந்தைவேலு குணானந்தசீலன்
(சீலன்)
உரிமையாளர், சீலன் லொறி பொடி பில்டர்ஸ்)

'எங்கள் குடும்பத்தின் ஆலமரமாய்
அன்பும் அறனும் நிறைந்த பாசவிளக்காய்
நல்வழிகாட்டிய எம் தந்தையே!
நாட்கள் முப்பத்தொன்றாகியும் உம்பிரிவை
எம்மால் ஏற்க இயலவில்லை
உங்கள் நினைவுகள் எமக்கு வழித்துணையாயிருக்க
உங்கள் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனைகளில் நாம் என்றும்"

எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டுச்சென்ற எம் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் இரங்கல் தெரிவித்த உற்றார், உறவினர்கள் நண்பர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (08.11.2021) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை கேட்டுக் கொள்கின்றோம்.

கண்டுவில் வீதி,
சாவகச்சேரி.
(CR 35838) (3-6)
குடும்பத்தினர்

# ஒளிராத மின்விளக்குகளால் பயணிப்போர் அசௌகரியம்

கிளிநொச்சி, நவ.8

கிளிநொச்சி, கரைச்சி- பெரிய பரந்தனில் கரைச்சி பிரதேச சபையால் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் 5 மாதங்களுக்கு மேல் ஒளிராத நிலையில் காணப்படுகின்றன என கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் இ.இளங்கோவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒளிராத வீதி விளக்குகள் தொடர்பில் சபை அமர்வுகளில் தெரியப்படுத்தியதன் பின் 28க்கும் மேற்பட்ட விளக்குகள் கழற்றப்பட்ட நிலையில் மீண்டும் அவை பொருத்தப்படவில்லை.

இதனால் இந்த வீதியால் இரவு நேரங்களில் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையிடம் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டபோதிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் தவிசாளர் அவதானம் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ச-13)



# கசிப்பு காய்ச்சல் யாழில் தாராளம்

## நாளாந்தம் தொடரும் கைது

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அண்மைக்காலமாக கசிப்பு காய்ச்சல் தாராளமாக இடம்பெற்று வரும் நிலையில், பொலிஸாரின் சுற்றிவளைப் புக்களும் கைது நடவடிக்கைகளும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. கொடிகாமம் பாலாவி, தவசிகுளம் பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில், கசிப்புடன் நேற்றுமுன்தினம் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூவருக்கும் எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை நெல்லியடியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக நாளாந்தம் கசிப்புடன் வெவ்வேறு பகுதி களில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்ட வண்ணம் உள் ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4,125)

# இந்தியாவில் தீபாவளியன்று காற்று மாசுபாடு 5 மடங்கானது

**புதுடில்லி, நவ.8**
**தீபாவளி தினத்தன்று பட்டாசு வெடித்ததில் காற்று மாசுபாடு ஐந்து மடங்காக அதிகரித்துள்ளது என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. கடந்த சில ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் இந்த மாசுபாடு பன்மடங்கு அதிகரித்துள்ளது.**



இது தொடர்பில் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, தீபாவளிக்கு முன்பு காற்றுத் தரக் குறியீடு சென்னையில் 41ஆக இருந்தது எனவும், தீபாவளியன்று 342ஆக உயர்ந்துள்ளது. தியாகராய நகரில் காற்றுத் தர குறியீடு 56லிருந்து 385ஆக உயர்ந்திருக்கிறது. நுங்கம்பாக்கத்தில் 51லிருந்து 369 ஆக உயர்ந்திருக்கிறது. திருவல்லிக்கேணியில் 52 லிருந்து 368ஆகவும் சௌகார் பேட்டையில் 60லிருந்து 371ஆகவும் இந்தக் குறியீடுகள் உயர்ந்துள்ளன. கடந்த 2019ஆம் 2020 ஆம் ஆண்டுகளில் சென்னையில் காற்றின் தரம் 100 என்ற எண்ணை ஒட்டியே இருந்தது.

ஆனால், இந்த ஆண்டு மாசுபாடு பல மடங்கு அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பட்டாசு வெடித்ததால் ஏற்பட்ட புகையும் நுண்துகள்களும் விரைவில் படியாமல் வெகு நேரம் காற்றில் மிதந்ததால் இந்த மாசுபாடு அதிகரித்துள்ளது என வாரியம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## பட்டாசு வெடித்ததில் தந்தை - மகன் சாவு

சென்னை, நவ.8
விழுப்புரம், கோட்டக்குப்பம் அருகே மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது பட்டாசு வெடித்ததில் தந்தை மற்றும் மகன் பரிதாபமாக உயிரிழந்தனர்.

புதுச்சேரியில் எல்லையை அண்மித்துள்ள கோட்டக்குப்பம் அருகே மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை - மகன் ஆகியோர் பட்டாசு எடுத்து சென்றுள்ளனர். அதன்போது இவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

இதில் எதிர்பாராதவிதமாக மகன் வைத்திருந்த பட்டாசு வெடித்ததில் இருவரும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Meta

## பேஸ்புக் நிறுவன செயலிகளில் 'மெட்டா பிராண்டிங்'

வட்ஸ்அப், இன்ஸ்டாகிராம், மெசஞ்சர் போன்ற பேஸ்புக் நிறுவன செயலிகளில் மெட்டா பிராண்டிங் நடைமுறைக்கு வந்துள்ளது.

பேஸ்புக் நிறுவனம் தனது பெயரை மெட்டா என மாற்றி அறிவித்திருந்தது. அந்த வரிசையில், தற்போது செயலிகளில் பேஸ்புக்குக்கு மாற்றாக மெட்டா எனும் பிராண்டிங் இடம்பெற்று இருக்கிறது.

முன்னரைப் போல் வழக்கமான சமூக வலைத்தளமாக நிறுவனமாக மட்டும் செயற்படுவதை தவிர்த்து, மெட்டாவெர்ஸ் எனும் புதிய மெய்நிகர் தொழில்நுட்பத்தில் இந்த நிறுவனம் முதலீடு செய்ய இருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது (ச)

## அரச மருத்துவமனையில் தீ: 11 பேர் உடல் கருகிச் சாவு!!

மகாராஷ்டிரா, நவ. 8
மகாராஷ்டிரா மாநில அகமதுநகர் மாவட்ட அரச மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். அத்துடன் 12 பேர் வரையில் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவசர சிகிச்சைப் பிரிவில் குறைந்தபட்சம் 20 பேர் வரையில் சிகிச்சைபெற்று வந்தனர் எனவும் இவர்கள் அனைவரும் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் எனவும் கூறப்படுகிறது. தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு பாதிக்கப்பட்ட நோயாளிகளை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)





## ஜெயலலிதாவின் உண்மை மகள் நானே
### பெண் ஒருவர் பரபரப்பு வாக்குமூலம்

புதுடில்லி, நவ.8
மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் மகள் நான்தான் என சென்னையைச் சேர்ந்த பெண் ஒருவர் மெரினாவில் உள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியுள்ளார். இதனால் அ.தி.மு.கவினர் இடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த பெண் கூறுகையில்,

நான் மைசூரில் பிறந்து, சென்னை பல்லாவரத்தில் தான் 30 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். என்னை வளர்த்த பெற்றோர் உயிரிழந்துவிட்டனர். என்னை பேபி என்று செல்லமாக ஜெயலலிதா அழைப்பார். ஜெயலலிதாவின் மகள் நான்தான் என்பதை நேரம் வரும்போது ஆதாரத்துடன் நிரூபிப்பேன்.

ஜெயலலிதா அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது பின்வாசல் வழியாகச் சென்று அவரைச் சந்தித்தேன். போயஸ் கார்டன் இல்லத்திலும் அம்மா ஜெயலலிதாவை ஒருமுறை சந்தித்துள்ளேன் எனக் கூறியுள்ளார். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** திருப்தியான நாள். பணியில் சாதகமான சூழ்நிலை ஏற்படும். நிதானமாகச் செயற்படுங்கள். குழந்தைகளால் சந்தோஷம் வரும். ஆரோக்கியம் மேம்படும். பணியில் பரபரப்பு கூடுதலாகும்.

**இடபம்:** நல்லவர்களின் உதவி கொண்டு செயல் ஒன்றை முடிப்பீர்கள். எதிர்பார்த்த சலுகை மெதுவாகக் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மிதுனம் :** பலநாள் காத்திருந்த வாய்ப்பு ஒன்று உங்களைத் தேடிவரும். விருது, பாராட்டைப் பெறுவீர்கள். கவலையில் இருந்து மீளுவீர்கள். பணியை செய்து நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** உங்களின் பொறுமைக்கு நல்ல பலன் கிடைக்கும் நாள். இன்று நல்ல செய்தி வரும். பிறர் உங்களை மதிப்பர். மனச்சுமை குறையும். பணியாளர்கள், மாணவர்கள் முன்னேற்றப் பாதையில் நடைபோடுவீர்கள்.

**சிம்மம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். பணப்புழக்கம் பற்றிய கவலை தீரும். சக பணியாளர்கள் இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு மறையும். விடா முயற்சியால் வளர்ச்சியைக் காண்பீர்கள்.

**கன்னி:** கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடுபட வேண்டியிருக்கும். கவலை ஒன்று நீங்கும். பணியாளர்களுக்கு சிறு நன்மை கிடைக்கும். விரும்பிய மாற்றம் உண்டாகும். வியாபாரிகளுக்கு மகிழ்ச்சி உண்டு

**துலாம்:** பணியிடத்தில் அனுபவசாலியின் ஆலோசனை உங்களுக்கு கைகொடுக் கும். உழைப்பினால் ஏற்றம் உண்டு. பணியாளர்களின் விருப்பம் நிறை வேறும். பணியாளர்களுக்கு நன்மை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** பணியாளர்கள் இன்று பரபரப்பாக செயற்பட வேண்டியிருக்கும். எடுத்த முயற்சியில் ஓரளவு வளர்ச்சி காண்பீர்கள். புதிய துறை ஒன்றில் நுழையும் முயற்சியை மேற்கொள்வீர்கள்.

**தனுசு:** சமீபத்திய பிரச்சினை நல்ல முடிவுக்கு வரும். தொழில் விருத்தி உண்டு. மனம் அலைபாயும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் கூடும். மனதுக்கு நெருக்கமானவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** பழைய நண்பர்களை சந்தித்து மகிழ்ச்சியுடன் பேசுவீர்கள். சுபச்செலவுகள் இன்று அதிகரிக்கும். கவலை ஒன்று தீரும். நீண்ட நாளாக நினைத்த விஷயம் ஒன்று நிறைவேறும்.

**கும்பம்:** முயற்சிகளில் தாமதம் ஏற்படும். நன்மைகள் கூடுதலாகும். உறவினர்களின் பகை மறைந்து அமைதி மீளும். பணியாளர்களுக்கு சிறிய மாற்றம் ஒன்று ஏற்படும். பொறுமை அவசியம்.

**மீனம்:** சிலருக்கு முயற்சிகள் தாமதப்படும். கவலை வேண்டாம். மனக்கலக்கம் தீரும். வம்பு பேசுவோரிடம் நெருங்க வேண்டாம். பணியாளர்கள் உற்சாகம் குறையாமல் பணிபுரிவார்கள்.

# தடுப்பூசி பெறுவோர் தென்மராட்சியில் மந்தம்

சாவகச்சேரி, நவ.8

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், தென்மராட்சிப் பிரதேசத்தில் அதிகமானோர் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளவில்லை என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த மாதம் 804 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனையில் 202 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் 9 கொரோனா இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

சுகாதாரத் திணைக்களத்தால் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம், தொற்றாளர்களாக இனங்காணப்பட்டவர்களில் 81 வீதமானோர் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளவில்லை என்பது தெரியவந்துள்ளது.

தொற்று ஏற்பட்டாதவர்களில் 16 வீதமானோர் முதல் கட்ட தடுப்பூசியையும், 3 வீதமானோர் இரண்டாம் கட்ட தடுப்பூசியையும் ஏற்றியவர்கள் என்றும் ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களால் அவர்களது குடும்பத்தினர், பிள்ளைகள் போன்றோர் பாதிக்கப்படலாம்.

எனவே தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் பிரதி திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும், உணவு, மருந்துப் பாவனையில் ஒவ்வாமை ஏற்படுவோருக்கு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பிரதி சனிக்கிழமைகளிலும் தடுப்பூசியைப் பெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4-9)

# மரநடுகையும் மரக்கன்று வழங்கலும்



மரநடுகை மாதத்தை முன்னிட்டு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காக்கைதீவு வீட்டுத்திட்டப்பகுதியில் மரக்கன்றுகள் வழங்கும் வைபவமும் மரம் நடுகை நிகழ்வும் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. காக்கைதீவு வீட்டுத்திட்ட குடியிருப்பில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் இரண்டு தென்னை மரக்கன்றுகள் ஒரு மாமுந்திரிகை, ஒரு மாதுளைச் செடி என்பன வழங்கிவைக்கப்பட்டன. தற்பொழுது புதிதாக செப்பனிடப்பட்ட யாழ்ப்பாணம், பொன்னாலை, பருத்தித்துறை வீதியில் காக்கை தீவுப்பகுதியில் உள்ள வீதியின் இரு மருங்கிலும் நிழல் தரும் மருத மரக்கன்றுகள் நடப்பட்டன. (ய-125)

## ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிப் புனரமைப்பு

# 'ஐ–றோட்' திட்ட வீதியை திறந்து மக்களை ஏமாற்றியுள்ளனர்

## கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் விசனம்



**கிளிநொச்சி, நவ. 8**

**மக்கள் நலன்கருதி கொண்டுவரப்பட்ட ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதி சீரமைக்கும் வேலைத்திட்டம், கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் ஒரு அடிகூட மேற்கொள்ளப்படவில்லை. இந் தவிடயத்தில் மக்களையும் அரசாங்கத்தையும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஏமாற்றியுள்ளனர் - என்று, கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் விசனம் தெரிவித்தார்.**

நாடு முழுவதும் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிச் சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டு, மக்கள் பாவனைக்கு திறந்துவிடும் நிகழ்வு, நாடு முழுவதும் ஒரே நேரத்தில் வார இறுதியில் நடைபெற்றது. அந்த நிகழ்வு கிளிநொச்சியிலும் நடைபெற்றது.

அது தொடர்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற குறித்த வீதியானது பிரதேச சபைக்குச் சொந்தமானது. குறித்த வீதியை நாங்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் 'ஐ-றோட்' திட்டத்தின்கீழ் உலகவங்கியின் நிதியுதவியோடு சீரமைப்பதற்காக கையளித்திருந்தோம். குறித்த வீதி 'ஐ-றோட்' திட்டத்தின் கீழ் சீரமைக்கப்பட்டு இப்பொழுது நிறைவு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது. குறித்த வீதி பிரதேசசபையிடம் இன்னும் ஒப்படைக்கப்பாதநிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. இது கவலை தருகின்ற விடயம். ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகளை சீரமைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் 10 மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சியிலே ஆரம்பிக்கப்பட்டு, பாரதிபுரம் - செபஸ்ரியார் வீதி, சக்திபுரம், எள்ளுக்காடு போன்ற வீதிகள் உட்பட 16 வீதிகளுக்கு பெயர்ப்பலகை இடப்பட்டதுடன், அடிக்கல்லும் நடப்பட்டிருந்தன. தேசிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில், குறித்த வீதியைத் திறந்து வைத்து காட்டியிருப்பது எங்களுடைய மக்களை ஏமாற்றுகின்ற செயல். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருக்கின்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர், இந்த விடயத்தில் கரிசனை கொள்ளாதது கவலை தரும் விடயம் - என்று தெரிவித்தார். (கு-6)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் 2,652 மாணவர்களுக்கு தடுப்பூசி




சாவகச்சேரி, நவ.8

தென்மராட்சியில் இதுவரை 2 ஆயிரத்து 652 மாணவர்கள் (77 வீதம்) தடுப்பூசி பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தென்மராட்சிப் பிரதேச பாடசாலை மாணவர்களில் சிலர் கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளவில்லை.

அவ்வாறு தடுப்பூசி ஏற்றாதவர்கள் பாடசாலைகளில் தொடர் கல்வியை மேற்கொள்ளாதவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பரீட்சைகளில் தோற்றியோரின் விவரங்கள் பாடசாலைகளால் வழங்கப்பட்டுள்ளன.

எனவே தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத மாணவர்கள் பிரதி சனிக்கிழமைகளில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4-9)

# ஈரான் பிரதமர் மீது ட்ரோன் தாக்குதல்!



பக்தாத், நவ.8

ஈராக் பிரதமர் முஸ்தபா அல்காதிமி மீது ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும் பிரதமர் முஸ்தபா அல்காதிமி அதிலிருந்து தப்பிக் கொண்டுள்ளார் என்று அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

தலைநகரின் பாதுகாப்பு வலயத்தில் உள்ள அவரது இல்லம், வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட ட்ரோன் மூலம் குறிவைக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலில் பிரதம அமைச்சரின் தனிப்பட்ட பாதுகாப்புப் படையைச் சேர்ந்த குறைந்தது ஆறு உறுப்பினர்கள் காயமடைந்துள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளன.

ஒரு ருவிற்றர் பதிவில் நலமாக இருப்பதை உறுதிப்படுத்திய காதிமி, அமைதியாகவும் நிதானமாகவும் இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒக்ரோபர் 10 ஆம் திகதி பொதுத் தேர்தல் முடிவுக்காக ஈராக் தலைநகரில் நடந்த போராட்டங்களுக்குப் பின்னர், நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்த தாக்குதல் நடந்துள்ளது. (ஏ-இ)


## கண்ணீர் அஞ்சலி



முன்னைநாள் வலி கிழ.தென் பகுதி
பல.நோ.கூ.சங்க காசாளரும் உரும்பிராய் -
ஊரெழு பட்டணசபை (Vic - Chairman)

**முத்துதம்பி சங்கரப்பிள்ளை**

06.11.2021 சனிக்கிழமை கொழும்பில் காலமானதால் ஆழாத்துயரில் உள்ள மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் அனுதாபத்தை தெரிவித்து அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல ஊரெழு வீரகத்தி விநாயகர் அம்பிகை அருள் சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

திரு. திருமதி கணேசலிங்கம்
(முன்னாள் வங்கிச் சேவை முகாமையாளர் V.E.S.D MPCS
திருக்குமாரி குடும்பம்
(cs 17974)(2.6)

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 02.02.1951
உதிர்வு 07.11.2021

**வேலுப்பிள்ளை சிவயோகன்**

(ஓய்வுநிலை நிறைவேற்று பொறியியலாளர், வீதி அபிவிருத்தி திணைக்களம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர).

எமது இலங்கை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கம், வட மாகாணத் தின் அங்கத்தவர் **திருமதி பி.சாமினி** (தொழில்நுட்ப உத்தியோகத்தர் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி திணைக்களம் - கிளிநொச்சி) அவர்களின் பாசமிகு தந்தை வே.சிவயோகன் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்கின்றோம்.

**இலங்கை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
(குடிசார், மின்னியல், இயந்திரவியல்) சங்கம்,
வட மாகாணம்.**

(CS 17978) 01/06

## மாவட்ட செயலக சிற்றுண்டிச்சாலை கேள்வி கோரல் 2021/2022
### மாவட்ட செயலகம் - கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட செயலக சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 19.11.2021ம் திகதிவரை கோரப்படுகின்றது.

பதிவு நிபந்தனைகள், கட்டண விபரங்கள், மாதிரி விண்ணப்ப படிவம் என்பவற்றை மாவட்ட செயலக நிதிக் கிளை மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களில் அலுவலக நாட்களில் 19.11.2021 திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலக பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். 021 2285352, 021 2285309

திருமதி றூ.கேதீஸ்வரன்
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
கிளிநொச்சி.

(CR 5841) (3/6)

## மன்னார் நகரில் துப்புரவுப் பணி



மன்னார், நவ.8
மன்னார்நகரை டெங்குத் தொற்றிலிருந்து பாதுகாக்கும் முகமாக சமூகப் பிரஜைகள் குழுவினர்கள் மற்றும் பொலிஸார் ஆகியோர் மன்னார் நகர சபையுடன் இணைந்து நேற்றுமுன்தினம் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். மேலும் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் ஓட்டோ சாரதிகளுக்கு விழிப்புணர்வு கருத்துரைகளும் சட்ட விளக்கங்களுக்கும் அளிக்கப்பட்டன. (ச-213)

## யாழ்ப்பாண விவசாயிகளுக்கு திரவ உரம்

யாழ்ப்பாணம், நவ.8
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நெற் செய்கையாளர்களுக்கு இன்று முதற்கட்ட மைனோ நைட்ரைஜன் திரவப் பசளை வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.நிஷாந்தன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புங்குடுதீவு, நல்லூர் தவிர்ந்த ஏனைய கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட நெற் செய்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
ஒரு ஹெக்ரேயருக்கு 1.25 லீற்றர் என்ற அடிப்படையில் திரவ உரம் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்றும், இரண்டாம் கட்டப் பசளை விரைவில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-20)

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17 . 05 . 1967
இறப்பு 20 . 10 . 2020

### திருமதி மகாலட்சுமி குகதாஸ்
(ஏழாலை மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியர்,
மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியர்)
திதி: வளர்பிறை சதுர்த்தி

ஆண்டு ஒன்று ஆனாலும் அன்னையே உங்கள்
அன்பின் அரவணைப்பு என்றும் எம் மனதை விட்டகலாது
எமது ஈரவிழி நீரால் உங்கள் பாதமலர் இறைஞ்சுகின்றோம்
உங்கள் நிழல் என்றும் எம்மனதிலே நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!

அம்பத்தை, மல்லாகம்.
077 491 4251
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்
(cs 40976) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30.06.1939
மறைவு 19.10.2020

### அமரர் தம்பிப்பிள்ளை இரத்தினவேல்
(ஓய்வுபெற்ற வன இலாகா அதிகாரி)
திதி: வளர்பிறை சதுர்த்தி

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

156, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
021 222 9897
(Cs. 40974) (2.6)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.12.1942
மறைவு 03.11.2016

### அமரர் கந்தையா பரமநாதன்
திதி: சதுர்த்தி

"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி இருக்கச் செயல்"
என்ற பொய்யா மொழியான் கூற்றை உமதாக்கி
உங்களை உருக்கி எம்மை ஆளாக்கினீர்களே ...
எங்கே போய்த் தேடுவோம் ஐயா....
உங்கள் கனிந்த முகத்தையும் மென் சிரிப்பையும் ...

4/3, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.
குடும்பத்தினர்
(CS 17958) (3.6)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை தமிழரசுக்கட்சி மத்திய குழுவின்
முன்னாள் உறுப்பினரும், வடக்கு மாகாணசபை
முன்னாள் உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சி
உடுப்பிட்டி தொகுதி கிளையின் செயலாளருமாகிய

**வே.சிவயோகன்** அவர்களின்

திடீர் மரணம் குறித்து எமது அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை தமிழரசுக் கட்சி
யாழ் மாவட்டக் கிளை.
(CR 5855) 1/6


## பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப் பெண் ஒருவர் தேவை.
Tel:077 327 6502
(CS 17976) (1/6)

## HOME VISIT CLASSES
TAMIL/ENGLISH MEDIUM
GR 6 - GR 13 - ENGLISH
ACCOUNTING, GEO, GITI/HISTORY
077 331 6402
(cs 40977) (2.6)

## அலுவலக உதவியாளர் தேவை
யாழ்நகரில் அலுவலகம் நடத்தும் சட்டத்தரணிக்கு ஆண் அலுவலக உதவியாளர் தேவை.
தமிழ் தட்டச்சு தெரிந்தவராக இருக்கவேண்டும். மகிழுந்து ஓட்டத் தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
070 482 8979
(CS 5855) (2.6)







கலாநிதி க.சிதம்ப



கலாநிதி எஸ்.ரகுராம்

# யோகேந்திரநாதன் எழுதிய 'காட்டு நிலா' நூல்வெளியீடு

எழுத்தாளர் யோகேந்திரநாதன் எழுதிய காட்டுநிலா என்னும் நூல் வெளியீடு 'உதயன்' வளாகத்தின் 'உதய வாசல்' மண்டபத்தில் கடந்த 30ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.

ஈழத்து இலக்கியத் துறையை ஒரு ஆரோக்கியப் பாதையில் இட்டுச் செல்ல உதவுகின்ற உதயன் பத்திரிகை நிறுவனத்தின் நாலாவது முயற்சியாக இந்நூல் வெளியீடு அமைந்திருந்தது. மொத்தம் 144 பக்கங்களைக் கொண்ட நூலின் உள்ளே காட்டு நிலா, முன்னூற்று அறுபத்து மூன்றாவது உயிர், நிறம்மாறிய கிராமம், நெஞ்சாங் கட்டை மற்றும் காத்திருக்கும் கடற்கரை என ஐந்து நாடகங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நூலில் வெளியீட்டு நிகழ்வை உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவன் மங்கல விளக்கினை ஏற்றி தொடக்கி வைத்தார். அக வணக்கத்தைத் தொடர்ந்து இளங்கீரன் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாத் தலைவர் கலாநிதி எஸ்.ரகுராம் தலைமை உரை யாற்றினார். நூலின் வெளியீட்டுரையை விரிவுரையாளர் றொபேட் தேவமைந்தன் நிகழ்த்தினார்.

கௌரவப் பிரதியை உதயன் குழுமத் தலைவர் ஈ.சரவணபவன் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதிகள் முறையே சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க. சிதம்பரநாதனுக்கும் எங்கட புத்தகங்கள் நிறுவனத்தின் ஸ்தாபகர் கு.வசீகரனுக்கும் வழங்கப்பட்டன. சிறப்புரையை வழங்கிய கலாநிதி சிதம்பரநாதனைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் மற்றும் யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப்பீட விரிவுரையா ளர் நல்லையூர் கண்ணதாசன் ஆகியோரினால் நூல் ஆய்வு ரையை நிகழ்த்தப்பட்டது. நூலாசிரியர் நா.யோகந்திரநாதனின் ஏற்புரையோடும் நன்றியுரையோடும் இனிதே நிறைவுபெற்ற நிகழ்வில் ஈழத்து இலக்கியத்துறைசார் ஆர்வலர்கள், குறிப்பாக நாடகத்துறைசார் புலமையாளர்கள் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.





றொபேட் தவச்செல்வம்



கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்

# மருத்துவத்தின் மகத்துவத்தன்மையை உணர்த்தியவர் மருத்துவர் சிங்கராசா



ஒரு நோயாளி மருத்துவமனைக்கு தனது நோய்பற்றி வேதனையுடனும், ஏக்கத்துடனும் வரும்போது மருத்துவர்கள், அன்றேல் மருத்துவமனைப் பணியாளர்கள் நற்சேவை செய்தலே சிறந்த மருத்துவப் பண்பாகும்.

மக்களிடம் மருத்துவர்களுக்கு இருக்கும் மதிப்பும், நம்பகத்தன்மையுமே என்றைக்கும் மருத்துவர்களுக்கு மிகப்பெரிய மூலதனமாகும். அவ்வாறானதொரு மரியாதையைப் பெற்றுக்கொண்ட மருத்துவரே அண்மையில் கனடா நாட்டில் அமரத்துவம் அடைந்த தென்மராட்சியைச் சேர்ந்த அமரர் சிங்கராசா ஆவார்.

சாவகச்சேரி, நுணாவில் மேற்குப் பகுதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர் மருத்துவர் சிங்கராசா. இவர் இலங்கையில் பல இடங்களிலும் பதிவு பெற்ற மருத்துவராகப் பணிபுரிந்து, தன் சேவைக்கால இறுதியில் வரணி மருத்துவமனையின் பொறுப்பதிகாரியாகக் கடமையேற்றுக்கொண்டார். அதன் பின்பு சாவகச்சேரி நகரில் தனியார் சிகிச்சை நிலையத்தையும் ஆரம்பித்து நடத்தி அனைவரின் அன்பையும், பாராட்டையும் பெற்றுக்கொண்டார்.

மேலும் தமது கடமையுடன் யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராகவும், 1992-1995ஆம் ஆண்டு வரை பதவி வகித்து, அக்காலப் பகுதியில் சங்கத்தின் தொண்டுப் பணியை துணிந்து ஆற்றினார். மேலும் அவர் அகில இலங்கை பதிவு செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவராகவும் பதவிவகித்து சங்கத்தின் வளர்ச்சிக்காக முன்நின்று உழைத்தவர். அத்துடன் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் பதவி வகித்தார். அமரர் சிங்கராசா மருத்துவச்சேவை, சமூகசேவை என இரண்டு பொறுப்புக்களையும் கண்ணியமாகக் கையாண்ட கடமை வீரர். மக்கள் மனதில் நீங்கா இடம் கொண்ட, மனித நேயமுடைய பண்பாளராவார். அவரின் மறைவையொட்டி தென்மராட்சி மக்கள் சார்பாக நிறைவான அஞ்சலியை செய்வோமாக.

**வை.இராசரத்தினம்**
**சாவகச்சேரி**

# மிருதங்க வித்தகர் கலைஞர் வேல்மாறன்



'தோன்றிற் புகழோடு தோன்றுக!' என்பதற்கிணங்க நல்ல புகழோடு வாழ்ந்தவர்தான் வேல்மாறன். அருமையான ஒரு நற்பண்பு நிறைந்த கலைஞனை கலையுலகம் இழந்து தவிக்கின்றது. சங்கீதக் கச்சேரி என்றால் அதற்கேற்றாற்போலும் பண்ணிசைக் கச்சேரி என்றால் அதற்குரிய பாணியிலும் வில்லிசை என்றால் அதற்குரிய முறையிலும் ஏற்றியும் இறக்கியும் மிருதங்கம் வாசிப்பதில் இவருக்கு நிகர் இவரே.

இணுவிலைச் சேர்ந்த சபா.சதாசிவம் பேபி தம்பதியருக்கு 1966ஆம் ஆண்டில் புத்திரனாகப் பிறந்த இவர், இளவயதிலேயே மிருதங்கம் பயிலத் தொடங்கிவிட்டார். கலைமகள் கருணையினால் வளர்ச்சியடைந்த வேல்மாறன் பல்வேறு வித்துவான்களுக்கும் நல்ல முறையில் மிருதங்கம் வாசித்து ஒரு நல்ல கலைஞனாக மிளிர்ந்தார். மிருதங்கம் மட்டுமன்றி கடம், கஞ்சிரா, மோச்சிங் முதலானவற்றிலும் கைதேர்ந்து விளங்கினார்.

எந்தநேரமும் புன்னகை பூத்தமுகத்துடன் நெற்றியில் திருநீறு துலங்க எம்மிடையே வலம்வந்த ஒரு நல்ல கலைஞன் இன்று எம்மிடையே இல்லை என்பதை நினைக்கும்போது துக்கம் தொண்டையை அடைக்கின்றது.

மேடையில் ஏறிய நேரம் முதல் நிகழ்ச்சி முடியும் வரை எந்தவித சலிப்பும் காட்டாமல் நிகழ்வைச் சோபிக்கச் செய்யும் நல்ல மனமுடையவர். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாளிடம் இடையறாத பக்தி பூண்டவர். தன்னுடைய வாழ்நாளில் பல மாணாக்கர்களை உருவாக்கி, முன்னுக்குக் கொண்டுவர அரும்பாடுபட்டவர் என்று கூறின் மிகையாகாது.

'கலாபூஷணம்
**இராசையா ஸ்ரீதரன்**

# மரண அறிவித்தல்



## திரு. கந்தையா லோகநாதன்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 02 | 05 |
| 01 | 11 |
| 1956 | 2021 |

மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா லோகநாதன் அவர்கள் கடந்த (05.11.2021) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் நவமணிதேவியின் அன்புக் கணவரும், லோஜனா (லண்டன்), புவிராஜ் (லண்டன்), சரீஸ்பராஜ் (பிரான்ஸ்), பகிராஜ் (லண்டன்), தனோசன் (லண்டன்), சோபநாத் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயம், நிசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜன்சிகா, தஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2021) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# முன்னணி நிறுவனத்தில் சிறந்த தலைவர் ஆகுங்கள்!



நாங்கள் இலங்கையில் சிறந்த நாமத்தை கொண்ட நிறுவனங்களில் ஒன்று தேசிய மற்றும் சர்வதேச அளவில் உயரிய விருது பெற்ற நிறுவனம் தொழில் செய்வதற்கு சிறந்த சூழலைக் கொண்ட நிறுவனம், இது இலங்கையில் சிறந்த வியாபார நிறுவனங்களில் ஒரு நிறுவனம்.

**நாங்கள் எதிர்பார்ப்பது**

க.பொ.த சாதாரண தரம் / உயர்தரத்தில் தேர்ச்சி, சந்தைப்படுத்தலில் இரண்டு வருட அனுபவம், சிறந்த தொடர்பாடல் திறன், ஒரு அணியை வழிநடத்த கூடிய திறன் கொண்ட 25 - 40 வயதுடையவர்களை.

**நாங்கள் வழங்குகின்றோம்**
- விற்பனை முகாமையாளர்
- உதவி விற்பனை முகாமையாளர் பதவி நிலை

**உங்களுக்கு கிடைக்க கூடியது**
- எல்லையற்ற வருமானம்
- மேல் நோக்கி செல்லக்கூடிய தொழில் பாதை
- விஷேடமான பயிற்சிகள்
- சுதந்திரமாக சேவை செய்யக்கூடிய பொருத்தமான சூழல்
- திருப்திகரமான தொழில்

**உங்களை வெற்றியின் பாதையில் அழைத்து செல்வோம்!**

Great Place To Work. Certified

தொடர்புகளுக்கு : 077 242 5414

உங்கள் விண்ணப்பத்தை sellaiyakiritharan89@gmail.com மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கவும்

உங்கள் வாழ்க்கைக்கு, உங்கள் பலம்.

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

(CS 40979) ( 3/6)

## போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்
## வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல் - 2022

01 யாழ் போதனா வைத்தியசாலை பெறுகைக்குழுவின் தலைவரினால் 2022ம் வருடத்திற்கான யாழ். போதனா வைத்தியசாலை வாகனங்களிற்கு சுத்திகரிப்புச் சேவையினை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02 கேள்வி மனுதாரர் வாகன சுத்திகரிப்புச் சேவைக்குரிய வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியுடன், கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000.00 ஐ யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகக் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பங்களை 09.11.2021 முதல் 23.11.2021 வரை மு.ப. 9.00 – பி.ப 3.00 மணிவரை யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய சாலை அலுவலக அறையில் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக்கட்டணமாக (Bid Bond) ரூபா 50,000.00 ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

04. கேள்வி விண்ணப்பங்களின் மூலப் பிரதியினை தயார் செய்து தபாலுறையிலிட்டு முத்திரை பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் "வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல் - 2022" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங் களை 24.11.2021 திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.

06. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே அவை அவ்விடத்திலேயே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதி நிதியொருவருக்கு அவ்வேளையில் சமூகமளிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

07. கேள்வி ஆவணங்களை யாழ். போதனா வைத்தியசாலை அலுவலக அறையில் இலவசமாக பார்வையிடலாம்.

08. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு கேள்வி ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.

09. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவைச் சார்ந்தது.

10. மேலதிக விபரங்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியசாலைச் செயலாளரை 021 222 7764 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(CR 35837) (3/6)

# மணிவிழா வாழ்த்து




## திருமதி அன்னராணி பாஸ்கரன்
(உடற்கல்வி ஆசிரியை)

**யா/ கம்பர்மலை அ.த.க.பாடசாலை**
**29 வருடங்கள் ஆசிரிய சேவை செய்து**
**08.11.2021 இல் ஓய்வுபெறும்** அவர்களை
செல்வச்சந்நிதி முருகன் ஆசிபெற்று பல்லாண்டுகாலம்
சீரும் சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
திரு. கி. சிவப்பிரகாசம் (பிரதிக்கல்விப் பணிப்பாளரும், சமாதானநீதிவானும்)
திருமதி சி. கெங்கேஸ்வரி
திரு. சி. ஜெயப்பிரகாஷ் குடும்பம் (லண்டன்)
திரு. சி. சந்திரப்பிரகாஷ் குடும்பம் (லண்டன்)
திருமதி. ஜீவகன் - சர்மிளா குடும்பம் (லண்டன்)

(cs 40978) (2.6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. கருணானந்தசிவம் மதுராந்தகன்
(Primary Trained, B.A, TESL, HNDE, B.Ed, M.Ed)



எமது பாடசாலையின் ஆங்கில பாட ஆசிரியர்
திரு. கருணானந்தசிவம் மதுராந்தகன் அவர்கள்
02.11.2021 அன்று இலங்கை திறந்த
பல்கலைக்கழகத்தின் 33ஆவது பட்டமளிப்பு
(நிகழ்நிலை) கல்வி முதுமாணி (M.Ed) பட்டம்
பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன்
மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வுகள் பெற
மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் கழகம்.**
**யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை.**
**நீர்வேலி.**

(CR 5854) 1-6

# பல்சமய கருத்தாடல்

யாழ்ப்பாணம், நவ.8
சமூக முன்னேற்றம் செயற்றிட்டம் ஊடாகப் பல் சமயக் கருத்தாடல் நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.
இலங்கைப் பல் சமய கருத்தாடல் நிலைய சகவாழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில், இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை யாழ் பொதுசனநூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிவித்துள்ளன. (ஒ-ரி1)

# திறப்பு விழா

வவுனியா, பம்பைமடு, கற்பகபுரம் வீதியின் திறப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றது.
அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகள் புனரமைப்புத்திட்டத்தின்கீழ் இந்த வீதி காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்பட்டு, மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் முன்மொழிவுக்கமைய இந்த வீதி புனரமைக்கப்பட்டது.
இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் பிரதிநிதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். (ஒ-ரி1-110)

# யாழில் No.1 ஆங்கிலப்பயிற்சி மையம்



**DIPLOMA IN ENGLISH**
**SPOKEN ENGLISH**
Reading Writing Speaking Listening

Foundation ENGLISH | Diploma in Fluent English Part-I | Diploma in Fluent English Part-II

நேரடி வகுப்பு **புதிய பிரிவுகள் ஆரம்பம் 10/11/2021** பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்

Call now **0777173517**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்** உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | |
|---|---|---|---|
| Mon,Wed,Fri- 9:00 a.m.<br>Mon,Wed,Fri- 3:00 p.m.<br>Sat,Sun - 2:00 p.m. | Tue,Thu - 3:30 p.m.<br>Sat,Sun - 3:30 p.m. | Mon,Wed,Fri- 3 : 00 p.m.<br>Sat,Sun - 3 : 30 p.m. | கிளிநொச்சி Sat,Sun - 9:00 a.m.<br>சாவகச்சேரி Tue,Thu - 8:00 a.m.<br>சண்டிலிப்பாய் Mon,Wed,Fri- 1:30 p.m. |

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

**IELTS**
# Unique Test Tips
# 40 hrs with free 4Mock exams
# Latest course Material ( Book 16)

**IELTS Life Skills A1** திருமணம் செய்து UK செல்வோருக்கானது

# DMI COMPUTER EDUCATION

**யாழ்ப்பாணம்** No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகாமை காளி கோவில் முன்பாக) | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) | சீரணிச்சந்தி | No.113, A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி மைதானம் முன்பாக) |
| **நெல்லியடி** | **சாவகச்சேரி** | **சுன்னாகம்** | **சண்டிலிப்பாய்** | **கிளிநொச்சி** |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |

(CS 40980)6

### மீளவும்...

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்படுமாக இருந்தால் மீண்டும் பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தவிர்க்க இயலாது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக நாளாந்தம் 500 தொடக்கம் 600 வரையான கொரோனாத் தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டு வந்த நிலையில், கடந்த மூன்று நாள்களாக அந்த எண்ணிக்கை 600 ஐக் கடந்துள்ளது.

பயணக் கட்டுப்பாட்டை தளர்த்திய பின்னர் மக்கள் பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்கின்றனர். இதனால் தொற்று நிலைமை மீண்டும் அதிகரிக்கும் நிலைமை உருவாகியுள்ளது- என்றார். (எ-22)

### கொரோனா....

யில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 856 ஆக உயர்ந்துள்ளது.

அதேவேளை, இலங்கையில் நேற்று 626 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதையடுத்து இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 45 ஆயிரத்து 256 ஆக உயர்ந்துள்ளது. (எ-22)

### விபத்தில்...

புரம் விக்ரோறியா கல்லூரிக்கு முன்பாக நடந்தது.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை, பின்புறமாக இன்னோரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. இரு மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இருவரும் காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். வைரமுத்து கந்தசாமி என்பரே நேற்று உயிரிழந்தார் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. (எ-125)

### வடக்குக்கு...

வதைத் தவிர்ப்பது சிறந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் களைநாசினி விசிறுதல் மற்றும் உரமிடுதல் செயற்பாடுகளை எதிர்வரும் சனிக்கிழமை வரை தவிர்ப்பது சிறந்தது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வளிமண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் காற்று ஒருங்கிணைவு காரணமாக இன்று அதிகாலை முதல் காலை வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்கள் உள்ளிட்ட 18 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த மாவட்டங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான கன மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எதிர்வு கூறியுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, புத்தளம், குருநாகல், கம்பஹா, கேகாலை, கண்டி, கொழும்பு, நுவரெலியா, பதுளை, களுத்துறை, இரத்தினபுரி, மொனராகலை, காலி மற்றும் மாத்தறை ஆகிய 18 மாவட்டங்கள் சிவப்பு எச்சரிக்கைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### ஒட்டகப்புலத்தில்..

விக்கப்பட்ட இந்தப் பகுதியில் காணி உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்த போதே வெடிபொருள்கள் தென்பட்டுள்ளன.

எறிகணை மற்றும் துப்பாக்கி ரவைகள் என்பவை காணப்பட்ட நிலையில், அது தொடர்பில் காணி உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நீதிமன்ற அனுமதி பெற்று வெடிபொருள்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-20)

### இழந்த...

வும், ஏனைய மாகாணங்களில் 45 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது. நடப்பாண்டில் தற்போதுவரை மேல்மாகாணத்தில் 90 சதவீதமாகவும், ஏனைய மாகாணங்களில் 70 சதவீதமாகவும் காணப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் மாணவர்கள் இழந்த கல்வியை வழங்குவதற்கு நவம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை காலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அது எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நீடிக்கப்படலாம் என்றும் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

3ஆம் மற்றும் 4ஆம் தர மாணவர்களுக்கு 2022ஆம் ஆண்டு மே மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை இந்தக் கல்வியை வழங்க முன்மொழியப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை நிர்வகிக்கும் முறை தொடர்பான சுதந்திரம் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்தத் திட்டத்துக்கு அமைய அத்தியாவசியப் பகுதிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

### 17 வயது...

ருந்தியமையே காரணம் என்பது உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் 2023 ஆம் ஆண்டு உயர்தர மாணவனான மஹிந்தன் (வயது-17) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு மாணவனும், வீட்டிலிருந்தவர்களும் நித்திரைக்குச் சென்றுள்ளனர். நேற்று அதிகாலை 3 மணியளவில் நிலம் ஈரமாகியுள்ளதை உணர்ந்து சகோதரி எழுந்து பார்த்துள்ளார். மாணவன் சிறுநீர் கழித்த நிலையில் மூச்சுத் திணறிக் கொண்டிருப்பதை அவதானித்து ஏனையோருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். உடனடியாக நோயாளர் காவு வண்டி மூலம் மாணவன் சங்கானை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு, அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவருக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டபோதும் நேற்று அதிகாலை 4 மணியளவில் மாணவன் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-125,27)

### ஈய ஆலைச்....

றுப் பிற்பகல் ஓமந்தை ஈயத் தொழிற்சாலையில் நடந்துள்ளது. மாத்தளையைச் சேர்ந்த வேலு உதயராஜ் (வயது-38) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் இரு பிள்ளைகளின் தந்தை என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமந்தை அரச வீட்டுத் திட்டத்துக்கு அருகில் உள்ள இந்தத் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தபோது சுவர் ஒன்று உடைந்து வீழ்ந்துள்ளது. அதில் சிக்கிய குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உயிரிழந்தவரின் உடல் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-110,18)

### சிவயோகன்...

கவும் செயற்பட்டார்.

கரவெட்டி, துன்னாலை மத்தியைச் சேர்ந்த அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை முற்பகல் துன்னாலை, கோயில் கடவையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (எ-27,20)

## கருத்து முரண்பாடு இருந்தாலும் இணைந்து செயற்பட வேண்டும்

### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, நவ.9

ஆளும் தரப்பில் உள்ள கட்சிகளுக்கு இடையே சில கருத்து முரண்பாடுகள் ஏற்படக்கூடும். ஆனால் அரசு என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்துபீட மகா நாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த வாரம் மேற்கொண்ட பயணத்தின் பலனாக பிரிட்டனில் இருந்து இலங்கைக்குப் பெரும் முதலீடுகள் கிடைத்துள்ளன. நல்லாட்சி அரசால் மாற்றப்பட்ட தேர்தல் முறைமைகள் சீரான முறையில் சரி செய்யப்படும். புதிய அரசமைப்பும் உருவாக்கப்படும்- என்றார். (எ-இ)

## கொக்கு மோட்டை வாய்க்கால் உடைப்பு

மன்னார், நவ.8

மன்னாரில் சில தினங்களாகக் கடும் மழை பெய்துவரும் நிலையில், மடுக்கரை கொக்கு மோட்டை வாய்க்கால் உடைப்பெடுத்துள்ளது.

வாய்க்கால் உடைப்பெடுத்துள்ளதால் பிரதான வீதியூடான போக்குவரத்துப் பாதிக்கப்படும் நிலையில், விவசாயச் செய்கைகளும் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் கமநல திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திரு. மரின்குமார், மடுக்கரை கிராம சேவையாளர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர். இராணுவத்தினர் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் மண்மூடைகள் அடுக்கப்பட்டு, உடைப்பு அதிகரிக்காதிருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ-213)



# வென்றது நியூஸிலாந்து வெளியேறியது இந்தியா!

டுபாய், நவ. 8

**ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானை நியூஸிலாந்து வீழ்த்தியதை அடுத்து, இந்திய அணிக்கு இருந்த இறுதி வாய்ப்பும் இல்லாமற்போனது. இன்று நடைபெறும் இந்தியா - நமீபியா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் இந்திய அணியால் அரையிறுதிக்குத் தகுதிபெற முடியாது.**




நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அழுத்தத்தை எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் துடுப்பெடுத்தாடுவதுதான் ஆப்கானிஸ்தானின் வியூகம். எனினும், அந்த வியூகத்துக்கு ஏற்ற வகையில் ஆரம்ப வீரர்கள் தமது செயற்றிறனை வெளிப்படுத்தவில்லை. முன்வரிசை வீரர்களான ஷசாய், ஷெசாட், ரகமதுல்லா மூவரும் முறையே 2, 4, 6 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். நபியுல்லா ஷடான் மட்டும் நம்பிக்கை தரும்வகையில் விளையாடினார். மொகமட் நபி அவருக்கு இணைப்பாட்டம் வழங்கிய போதிலும் அவரால் அதிரடியை வெளிப்படுத்த முடியவில்லை. 20 பந்துகளில் 14 ஓட்டங்களையே நபி பெற்றார். ஷடான் 48 பந்துகளில் 73 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் 8 இலக்குகளை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது ஆப்கானிஸ்தான் அணி. பந்துவீச்சில் போல்ட் 3 இலக்குகளையும், சவுத்தி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.



பதிலுக்குக் களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர்கள் நம்பிக்கையைக் கொடுத்தனர். கப்ரில் 28 ஓட்டங்களையும், மிச்செல் 17 ஓட்டங்களையும் பெற்றனர். நியூஸிலாந்து முதல் 10 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. எனினும் அதன் பின்னர் வில்லியம்சன், கொன்வே இருவரும் நிலைத்துநின்று ஆட்டத்தை கனகச்சிதமாக நகர்த்திக் கொண்டிருந்தனர். கொன்வே அவ்வப்போது சில பவுண்டரிகளைப் பதிவுசெய்து அழுத்தத்தைக் குறைத்தார். மறுமுனையில் வில்லியம்சன் பொறுப்புணர்ந்து விளையாடினார். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைக் கடந்தது 11 பந்துகள் மீதமிருக்க 8 இலக்குகளால் வெற்றிபெற்றது நியூஸிலாந்து அணி. (ம)

IELTS New Batch
Life Skill - A1
By.B.MURALI, BA (Eng), MEd,MSc (UK)
Fee: மாணவர்களுக்கான விசேட சலுகை
53, சிவகுருநாதர் வீதி, Brown Rd. 077 798 9830
(CS 40913) (1-6)

விற்பனைக்கு
பான்சி, பேபி நீட்ஸ், பார்மசி நடத்தக் கூடிய கடைத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. அத்துடன் A/C பொருத்தப்பட்ட கடையும் வாடகைக்குண்டு.
தொடர்பு: 076 012 4104
(ne 17808) (2.6)

# ஜமைக்கா மக்கள் முன்னிலையில் இறுதியாக விளையாட வேண்டும்

## கெய்லின் விருப்பம் இது



ஜமைக்கா, நவ. 8

ஜமைக்கா மக்கள் முன்னிலையில் இறுதியாக விளையாடிவிட்டு விடைபெறுவதற்கே விரும்புகின்றேன் என்று தெரிவித்துள்ளார் மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி வீரரான கிறிஸ் கெய்ல்.

ரி20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுடனான ஆட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்னுமொரு உலகக்கிண்ணத் தொடரில் விளையாட எனக்கும் ஆசைதான். ஆனால், என்னை அனுமதிக்க மாட்டார்களே. நான் ஓய்வு ஏதும் அறிவிக்கவில்லையே. நான் ஜமைக்காவில் என்னுடைய மக்கள் முன் கடைசியாக விளையாடிவிட்டு அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் அப்படி எந்த எண்ணமும் இல்லாமல் இருந்திருந்தால், நான் எப்போதோ ஓய்வு அறிவித்துவிட்டு, பிராவோவுடன் இணைந்திருந்திருப்பேன். ஆனால், என்னால் அவ்வாறு என் மக்களுக்கு நன்றி செலுத்தாமல் ஓய்வுபெற முடியாது.

நான் இந்த உலகக் கோப்பையை விளையாட வந்தபோது என்னுடைய தந்தை மிகவும் நோய் வாய்ப்பட்டிருந்தார். நான் முதல் போட்டியில் பங்கேற்றபோதுகூட என் தந்தைக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது குறித்து தெரியாது. அதன் பின்புதான் தெரியவந்தது ஆனால், பயோபபுளைவிட்டு செல்ல நேரிடும் என்பதால் நான் ஜமைக்கா செல்லவில்லை.

இந்தத் தொடர் முடிந்துவிட்டதால் நான் ஜமைக்காவுக்குதான் நேரடியாகச் செல்கிறேன். என் தந்தை 91 வயதில் உயிருக்குப் போராடி வருகிறார். நான் அவரைக் காணச் செல்கிறேன். சில நேரங்களில் ஒரு வீரர் பல விஷயங்கள் மனதில் வைத்து விளையாடுவார் ஆனால் அவரால் எதையும் வெளிப்படுத்த முடியாது. அதைத்தான் நாங்களும் இங்கு செய்தோம்.

நான் மிகவும் உறுதியான மனிதன். என்னுடைய கடினமான உழைப்பைப் பலரும் பார்த்துள்ளார்கள். ஆனால் எந்தவிதமான ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாகப் பணியாற்றுவேன். எனக்கிருக்கும் புத்தியையும் நேர்த்தியாகப் பயன்படுத்துவேன். நான் வறுமையில் இருந்து வளர்ந்து வந்துதான் இப்போது ஏராளமாக சம்பாதித்துள்ளேன். நான் வளரும்போது, என்னிடம் ஏதும் இல்லை, எந்தச் செல்வச் செழிப்பும் இல்லை. இப்போது அனைத்தும் சாத்தியமாகியிருக்கின்றது - என்றார். (ம)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் மிக குறைந்த கட்டணத்தில் பொதிகள் அனுப்பிட
UK 950/=
திருமுருகன் கொம் நெற்
321 K.K.S.Road, Jaffna. 077 755 4528
(CS 17977) (3.6)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு பிரதான வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(பலாலி வீதியிலிருந்து 600 M தூரம்)
(CS 17975) 1-6
077 6234 204, 077 2880 152

Techno World
தொழில்நுட்ப கல்லூரி
TECHNO WORLD
INNOVATIVE IDEAS OPEN NEW WORLD
வெலிங்டன் சந்தி லிங்கம் கூல்பார் அருகாமை
A/L 2023, 2021, 2022, Day class ஆகிய பிரிவுகளுக்கு Zoom Class மற்றும் நேரடி வகுப்பு ஆரம்பம்.
திகதி - 16.11.2021
காலம் - செவ்வாய் பிற்பகல் 3.30 pm
அனுமதிகளை நேரடியாக வந்து அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
வேறு எங்கும் கிளைகள் கிடையாது.
தொடர்புகளுக்கு
077 017 5346
(CR 35839)1-6



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.